











# விடுதலைப்புலிகள்




குரல்: 131 | ஆனி - ஆடி, 2006 | அன்பளிப்பு: 12/=

# ஒற்றையாட்சிக்குள் தீர்வென்றால் தனியரசு அமைக்க முயற்சி செய்வோம்

**இலங்கைத்தீவின் தமிழ் - சிங்கள இனப்பிரச்சினை வரலாற்றில் 'அனைத்துக்கட்சி மாநாடு' என்ற அரசியல் நிகழ்ச்சியை சிங்கள அரசு காலத்திற்குக்காலம் அரங்கேற்றிவருகின்றது. ஒவ்வொரு 'அனைத்துக்கட்சி' மாநாடும் நடாத்தப்பட்ட வேளைகளிலிருந்த அரசியற் புறச்சூழல்களை ஆராய்ந்து பார்த்தால் ஒரு அரசியல் உண்மை புலப்படும். அது சிங்கள ஆட்சியாளர்களின் இனவாத முகத்தையும் ஏமாற்று அரசியலையும் அம்பலப்படுத்திக் காட்டும்.**

**திம்பு பேச்சுவார்த்தைகளில் தமிழர்தரப்பு வைத்த அரசியற் கோரிக்கைகளை பரிசீலிக்கவே மறுத்த சிங்கள அரசு, பேச்சுக்களை முறித்துக்கொண்டது. அதைத்தொடர்ந்து அன்றைய ஜே.ஆர் அரசாங்கம் 'அனைத்துக்கட்சி மாநாடு' என்ற அழகிய பெயரில் சிங்களக் கட்சிகளை ஒன்று கூட்டியது. தாயகம் - தேசியம் - தன்னாட்சி என்று தமிழர் தரப்பு திம்புவில் வைத்த அரசியல் கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டு 'மாவட்டசபை' என்ற எலும்புத்துண்டை மேலும் எவ்வாறு அழகுபடுத்தலாம் என்று சிங்களக் கட்சிகளுடன் கூடிக்கதைத்து மாநாட்டை முடித்துக்கொண்டது.**

பின்னர் சமாதானத் தேவதைபோலத் தன்னை உரு வகித்த சந்திரிகா அம்மையார் பதவிக்கு வந்ததும் புலிகள் இயக்கத்துடன் ஒரு சமரசப்பேச்சிற்கு வந்திருந்தார். யாழ்ப்பாணப் பேச்சுவார்த்தை என்று அழைக்கப்படும் அந்தச் சமாதான முயற்சியும் சந்திரிகா அம்மையாரின் இராணுவத் திமிர்த்தனத்தால் முறிவடைந்திருந்தது. அதனைத் தொடர்ந்து அம்மையாரும் ஒரு அனைத்துக்கட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். முடிவில் அரைகுறைத் தீர்வுப் பொதி ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

இப்போது நோர்வே அனுசரணையுடன் சர்வதேச அரங்கில் கடந்த நான்கரை வருடகாலமாக நடந்துவந்த பேச்சுவார்த்தையும் சிங்கள ஆட்சியாளர்களின் கடும் போக்கு மற்றும் சமாதான விரோதச் செயற்பாடுகளால் செயலற்றுப்போயுள்ளது.

இந்தப் புறச்சூழலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வும் ஒரு அனைத்துக்கட்சி மாநாட்டைக் கூட்டியுள்ளார்.

பேச்சுவார்த்தைகளின் போது தமிழர் தரப்பு முன் வைக்கும் அரசியற் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாது அல்லது நடைமுறைப்படுத்தாதிருந்து பேச்சைக் குழப்பி யடித்துவிட்டு பின்னர், அனைத்துக்கட்சி மாநாடு என்று கூறி, சிங்களக் கட்சிகளை ஒருங்கிணைத்து "சிங்களதேசம் சமாதானத் தீர்வொன்றைக் காணும் விருப்புடனேயே உள்ளது." என்றுகாட்டி சர்வதேச சமூகத்தையும் தமிழ் மக்களையும் ஏமாற்றவுமே அனைத்துக்கட்சி மாநாடு என்ற அரசியல் நாடகத்தை சிங்கள ஆட்சியாளர்கள் அடுத் தடுத்து அரங்கேற்றி வருகின்றனர்.

அமைதிவழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணல் என்ற அரசியல் நடைமுறையின் உச்சக்கட்டமான சர்வதேச மயப்பட்ட பேச்சுவார்த்தை வாயிலாக தமிழரின் விடுதலைப்போராட்டம், இப்போது சர்வதேச அரசியலாகி விட்டது. இந்தச் சர்வதேச அரசியல் களத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வுமுயற்சி என்பது சர்வதேசச் சட்டங் கள், நியமங்கள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படை யிலேயே அணுகப்படவேண்டிய நிலையும் எழுந்துள்ளது. இது சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கு ஏற்புடைய விடயமாக இருக்கவில்லை.

எனவேதான், சர்வதேசமயப்பட்டுவிட்ட தமிழரின் போராட்ட அரசியலை மீண்டும் உள்நாட்டுப் பிரச்சினை யாகத் தரம் இறக்கி - அனைத்துக்கட்சி மாநாட்டின் தீர்மானம் என்றுகூறி அரைகுறைத் தீர்வொன்றைத் திணித்து - அதை விடுதலைப்புலிகள் நிராகரிக்கும்போது அதைச் சாட்டாகவைத்து - தமிழ்மக்கள் மீது இராணுவத் தீர்வொன் றைத் திணிக்கும் நோக்குடன் மகிந்த அரசு காய்களை நகர்த்துகின்றது.

இந்த அனைத்துக்கட்சி மாநாட்டின் துவக்க நிகழ் வில் உரையாற்றிய ஜனாதிபதி மகிந்தரின் கருத்துக்கள் தமிழரின் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அவரது அரசு எங்கே நிற்கின்றது என்பதை தெளிவாக்கியுள்ளன.

ஒற்றை ஆட்சிக்குள் - சிங்கள மக்களின் சம்மதத் துடன் - உள்ளகத் தீர்வொன்று எட்டப்படவேண்டும் என் பதே மகிந்தரது உரை வெளிப்படுத்தும் சாராம்சங்களாகும்.

(தொடர்ச்சி 02ம் பக்கத்தில்)



தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

# ஒட்டுக்குழு அரசியலுக்கு வாகனேரியில் முற்றுப்புள்ளி

புலிகளின் குரல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியாக விளங்கும் வாகனேரிக் குறிச்சியில், சிங்களப் படைகள், பெருமெடுப்பில் திரண்டு - ஊடுருவித் தாக்குதல் நடாத்த முயன்ற இராணுவ நிகழ்ச்சி, சிங்கள அரசின் உண்மை முகத்தைச் சர்வதேச சமூகத்திற்குத் தோலுரித்துக் காட்டியுள்ளது.

கடந்த டிசம்பரில் இருந்து புலிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் நிழல்யுத்தத்திற்கும் - சிங்களப் படைகளுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்றே சிங்கள அரசு கூறிவந்தது. அந்த நிழல் யுத்தம் புலிகளுக்கும் - தமிழ் ஒட்டுக்குழுக்களுக்குமிடையேயான மோதல் என்றே அது சர்வதேச சமூகத்திற்குக் காட்டி வந்தது.

ஆனால், அன்று வாகனேரிப்பகுதியில் நடந்த சண்டையில் சிங்கள இராணுவத்தின் பன்னிரண்டு உடல்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதும் - சண்டை நடந்த இடம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிதான் என்று கண்காணிப்புக்குழு உறுதிப்படுத்தியதும் ஒரு முக்கியமான கேள்வியை சர்வதேச அரங்கில் எழுப்பியுள்ளது.

அதாவது, சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டை சிங்கள அரசு நிராகரித்து விட்டதா! என்பதே அதுவாகும்.

போர்நிறுத்த சூழலை உடைத்து மீண்டும் போரைத்தொடங்க சிங்கள அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்துவருகின்றது என்பதே உண்மையாகும். அதற்காகப் போராளிகள்மீதும் - தமிழ்மக்கள் மீதும் கொலைத் தாக்குதல்களை நடாத்தி புலிகளைச் சீண்டிவருகின்றது. புலிகள் இயக்கமே போரைத் தொடங்கட்டும் என்பதுதான் சிங்கள அரசின் விருப்பமாகும்.

ஏனென்றால் தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு வழங்கும் எண்ணம் சிங்கள அரசிடமில்லை. இராணுவத்தீர்வு மூலம் தமிழர்களை ஒடுக்குவதே அதனது நீண்டகாலத் திட்டம்.

சமாதானப் பேச்சுக்கள் தொடராதுவிட்டாலும் சமாதானச் சூழலைப் பாதுகாக்க புலிகள் காட்டும் நீண்ட பொறுமை - விட்டுக்கொடுப்பு என்பன இன்றுவரை பெரும்போரைத் தள்ளிவைத்து வருகின்றது.

புலிகளின் இந்த நீண்ட பொறுமையை உடைக்கவே வாகனேரியில் சிங்கள அரசு பாரியதொரு தாக்குதல் முயற்சிக்கு உத்தர விட்டிருந்தது. இந்த முயற்சியில் சிங்கள அரசு வெற்றிபெற்று - தாக்கவந்த படையினரும் தப்பிச் சென்றிருப்பார்களேயானால், இந்தத் தாக்குதலுக்கும் சிங்களப் படைக்கும் சம்பந்தமில்லை என்று சிங்கள அரசு கூறியிருக்கும்.

நான்கு - ஐந்து படையினர் கொண்ட சிறுகுழுவாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நுழைந்து தாக்குதல்கள் நடாத்திவந்த படையினர் இப்போது பல டசின்கணக்கில் ஊடுருவித்தாக்குதல் நடாத்த முயன்றுள்ளனர்.

சமாதானப் பேச்சுக்களுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களை மகிந்த அரசு களையவேண்டும் என்று சர்வதேச நாடுகளே கோரிவருகின்றன. ஆனால், ஆயுதக்களைவு என்ற பேச்சிற்கே இடமில்லை என்று சிங்களத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளரே உறுதிப்படக் கூறிவிட்டார்.

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவு என்பது சிங்கள அரசின் இராணுவ நலன்களுக்குப் பாதகமானது என்று சிங்கள அரசு எண்ணுகின்றது. ஒட்டுக்குழுக்கள் நிராயுதபாணிகளாக்கப்பட்டால் வாகனேரி போன்ற தாக்குதல்களை நடாத்திவிட்டு ஒட்டுக் குழுக்களே செய்தன என்று சர்வதேசத்திற்குப் பொய் கூறுவது சிங்கள அரசிற்குச் சாத்தியமில்லாமல் போய்விடும்.

அதேவேளை, தீர்வுமுயற்சிகள் - அனைத்துக் கட்சி மாநாடுகள், நிபுணர்குழுக்கள்... என்ற சிங்கள அரசின் அரசியல் நாடகங்களும் சர்வதேச சமூகத்தின் முன் அம்பலமாகிவிடும் என்றும் அது அஞ்சுகின்றது.

இதனாலேயே ஒட்டுக்குழுக்களின் ஆயுதக்களைவுக்கு மகிந்த அரசு விடாப்பிடியாக மறுத்து வருகின்றது.

ஒட்டுக்குழுக்கள் அரசியலும் - தீர்வுமுயற்சி நாடகங்களும் இன்றைக்கு மட்டும் நடக்கவில்லை. சிங்கள ஆட்சியாளர்கள் இவற்றைப் பல்லாண்டுகளாக நடாத்தி வருகின்றனர். இந்தச் சூழ்ச்சி அரசியலைத் தமிழ்மக்கள் முழு அளவில் புரிந்துவைத்திருக்கின்றனர். அதனாலேயே, இன்று தமிழ்மக்கள் மத்தியில் மாபெரும் எழுச்சி தோன்றியுள்ளது.

எனினும், சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும், குழப்பவுமே ஒட்டுக்குழுக்கள் அரசியலையும் - தீர்வுமுயற்சி நாடகங்களையும் சிங்கள அரசு அரங்கேற்ற முயற்சிக்கின்றது.

சிங்கள அரசின் இந்த நயவஞ்சக நோக்கத்தைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் புலிகள் இயக்கத்தின் விருப்பமாகும்.

போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள இராணுவ அம்சங்களான ஒட்டுக்குழுவின் ஆயுதக்களைவு போன்ற விடயங்களை மட்டும் சிங்கள அரசு உதாசீனம் செய்கின்றது என்றில்லை. உடன்பாட்டிலுள்ள அரசியல் - பொருளாதார அம்சங்களையும் சிங்கள அரசு காலில்போட்டு மிதித்து வருகின்றது.

தமிழர் தாயகத்தில் இன்றும் மீன்பிடித்தடை - கட்டுப்பாடுகளை சிங்களக் கடற்படை அமுல்படுத்துகின்றது. எரிபொருட்கள் எடுத்துச் செல்வதை சிங்கள இராணுவம் தடுக்கின்றது. கட்டடப் பொருட்களுக்கான தடையையும் படையினர் அமுல்படுத்துகின்றனர். இதனால், சர்வதேச தொண்டர் நிறுவனங்களளவிலான மனிதாபிமானப் பணிகள் கூட தமிழர் நிலத்தில் தடைப்பட்டுப்போயுள்ளன.

இந்தவகையில் சமாதானகால நன்மைகள் எவற்றையுமே தமிழ் மக்கள் சரியாக அனுபவிக்கவில்லை என்பதே உண்மையாகும். சமாதான காலத்திலும் சிங்கள அரசின் நயவஞ்சகமான இராணுவத் தாக்குதல்களால் தமிழ்மக்கள் அழிவையும் - இடப்பெயர்வுகளையும் - அகதி வாழ்க்கைகளையுமே அனுபவித்துவருகின்றனர்.

தமிழரின் இராணுவ பலம்தான் தமிழினத்திற்கு நிம்மதியான வாழ்க்கையையும் - நிரந்தரமான தொழில்களையும் - கௌரவமான இருப்பையும் வழங்கும் என்பதே இன்றைய யதார்த்தமாகும். சிங்களத்தின் இராணுவச் சதிகளையும் - அதனுடைய அரசியற் சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு ஒரு நிரந்தர விடுதலைக்காகத் தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றுபடுவதே இன்றைய காலத்தின் அவசிய தேவையாகும். ஒற்றுமையும் - பலமும்தான் தமிழரின் தலைவிதியைத் தீர்மானிக்கும் தாரக மந்திரங்களாகும். ●

---

(தொடர்ச்சி 02ம் பக்கத்தில்)

அவரது உரையில் தமிழரின் அரசியல் அபிலாசைகள் கருத்தில் எடுக்கப்படவேயில்லை. அவர்கூட்டிய அனைத்துக்கட்சி மாநாட்டில் தமிழரின் நடாளுமன்றப் பிரதிநிதிகளும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. மொத்தத்தில் ஜே.ஆரின் அரசைப்போல - பிரேமதாசாவின் அரசைப்போல - சந்திரிக்காவின் அரசைப்போல மகிந்தர் அரசும் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக கடுமையான பேரினவாத நிலைப்பாட்டையே எடுத்துள்ளது.

புலிகள் இயக்கம் பேச்சு மேசைக்கு வரமறுக்கின்றது! புலிகள் இல்லாமலே அரசியற்தீர்வு காணப்படும்! புலிகள் வேறு மக்கள் வேறு என்று புளித்துப்போன பழைய பல்லவிகளையே மகிந்தரும் தனது உரையில் ஒப்புவிக்க முனைந்துள்ளார்.

கடந்த 30வருடகால ஆயுதப் போராட்ட அரசியலில் சிங்கள அரசுடன் ஐந்து தடவைகள் புலிகள் இயக்கம் நேரடியாகப் பேசியுள்ளது. இந்த ஐந்து பேச்சு முயற்சிகளும் சிங்கள ஆட்சியாளர்களின் கடும்போக்கு நிலைப்பாடுகளாலும் - இராணுவத் திமிர்த்தனங்களினாலும் தோல்விகளையே சந்தித்துள்ளன.

நோர்வே அனுசரணையுடன் நடந்த பிந்திய சமாதான முயற்சியின்போது இருதரப்பிற்குமிடையே ஒரு போர்நிறுத்த உடன்பாடு காணப்பட்டு - அதன் அடிப்படையில் சில இணக்கப்பாடுகளும் எட்டப்பட்டிருந்தன. ஆனால், இவற்றிற்கு மதிப்பளித்து - நடைமுறைப்படுத்தி சமாதான முயற்சிக்கு உரமூட்ட சிங்கள அரசு தவறியதால் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்று புலிகள் இயக்கம் நிலைப்பாடெடுத்திருந்தது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும்படியும் ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து பேச்சு முயற்சிக்குப் புத்துயிர் ஊட்டும்படியும் மகிந்த அரசை பல தடவைகள் புலிகள் இயக்கம் கேட்டிருந்தது. ஆனால், ஒட்டுக்குழுக்களது கொலைச்செயல்களை உற்சாகப்படுத்தியும் - ஆழ ஊடுருவும் படைகளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுப்பி புலிகளையும் மக்களையும் படுகொலை செய்ய அனுமதித்தும் - தமிழர் தாயகத்தில் இராணுவ அட்டூழியங்களை அதிகப்படுத்தியும் அமைதிச்சூழலை மகிந்த அரசே போட்டுடைத்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு புலிகளுடன் நேரடியாகப் பேசியே காணப்படமுடியும் என்பதே சர்வதேச நாடுகளின் நிலைப்பாடுமாகும். புலிகளைப் புறந்தள்ளிவிட்டு எந்த ஒரு அரசியற் தீர்வையும் மகிந்த அரசால் காண முடியாது. இத்தகைய குருட்டுத்தனமான முயற்சிகளை முன்னர் சந்திரிகா அம்மையாரும் மேற்கொண்டு படுதோல்வி கண்டதுடன் - இனப்பிரச்சினையை மேன்மேலும் சிக்கலாக்கியுள்ளார் என்ற உண்மையையும் மகிந்த ராஜபக்ச உணரவேண்டும்.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற மகிந்தரின் சிந்தனை வெறும் கற்பனைக் கதையாகும். தமிழ்மக்களுக்கு எத்தகைய தீர்வை வழங்குவதென்று, தமிழர் தரப்பை ஒதுக்கிவிட்டு, சிங்களக் கட்சிகள் மட்டுமே ஒன்றுகூடித் தீர்மானிப்பது என்பதும் ஒரு கேலிக்கூத்தான செயலாகும்.

ஒற்றை ஆட்சி என்ற குண்டுச் சட்டிக்குள் சிங்களப் பேரினவாதிகள் விரும்பியபடி குதிரையோட்ட புலிகள் இயக்கம் என்றைக்கும் உடன்படமாட்டாது.

சமாதானம் - மனிதாபிமானம் - விழுமியங்கள் என்று சந்திரிகா அம்மையாரைப்போல மகிந்தரும் முதலைக் கண்ணீர் வடித்து உரையாற்றுவதால் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

தமிழரின் இனப்பிரச்சனைக்கு அமைதிவழியில் அரசியற் தீர்வு காண வேண்டும் என்று மகிந்த அரசு உண்மையாகவே விரும்பினால் ஏற்கனவே உள்ள போர்நிறுத்த உடன்பாட்டிற்கு அவரது அரசு புத்துயிர் அளிக்க முன்வரவேண்டும். அதன்பின்னர், புலிகள் இயக்கம் சிங்கள அரசிடம் சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு அரசியற் பேச்சுக்கு முன்வரவேண்டும். அவ்விதம் மகிந்தரின் அரசு முன்வந்தால் அவர்களுடன் பேச புலிகள் இயக்கம் தயாராக உள்ளது.

புலிகளின் இந்த அரசியல் நிலைப்பாட்டை ஏற்க மறுத்து தம்வழி செல்ல மகிந்த அரசு முயற்சித்தால் புலிகள் இயக்கமும் தனிவழிசென்று தமிழரின் அரசியல் விடுதலையை வென்றெடுக்கப் பாடுபடும். ●

# வரலாற்றின் அனுபவக் களஞ்சியத்தின் மகத்தான ஆயுதம்

- க.வே.பாலகுமாரன் -

கடுகத்தனை இச் சின்னம் சிறு தேசத்தின் புழுதி படிந்த மூலை முடுக்குகளில் இன்று நடப்பதை மலையத்தனை பென்னம் பெரு சருவதேச நாடுகள் வியப்போடும், நூதனத்தோடும் பார்த்துக்கொண்டிருக்கின்றன. உலகில் உதவ எவரும் முன்வராத, ஒருநாள் என்றில்லாமல் எந்நாளும் வதைபடும் இவ்வினம் தன்னைத்தானே தற்காத்துக் கொள்வதற்கான போரியல் வலுவைப் பெறுவதற்காக இராணுவப் பயிற்சிபெறும் காட்சிக்கோலங்கள் உலகின் மனதைத் தொடுகின்றன. **"மலரும் நினைவுகளாகவும்"** அவை உலகின் முன் விரிகின்றன. 21ஆம் நூற்றாண்டிலும் போராட்டச் சூழலைத் தக்கவைத்து 18, 19, 20ஆம் நூற்றாண்டுகளில் பல்வேறு நாடுகளில் விரிந்த விடுதலைக்கான போர்ச் செயற்பாடுகளை மீளவும் புதுப்பிக்கும் பதிப்பித்தல் பணியைப் புலிகள் "கருமமே கண்ணாக" மேற்கொள்வதை உலகம் காண்கின்றது. எல்லா நாடுகளிலுமே வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு பின்னணியில் வெவ்வேறு மாதிரிகளில் விடுதலைச்சேனை தீட்டப்பட்டதை வரலாறு பதிந்துள்ளது. இங்கிலாந்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராக அமெரிக்க மாநிலங்களில் மக்கள் போர் வீரர்களாகத் திரட்டப்பட்டமை, இந்திய விடுதலைக்காக காந்தி, பகத்சிங் போன்றோர் எதிரெதிர் நிலைகளில் அணிதிரட்டியமை, ஈரானில் பிரான்சிலிருந்து கொண்டே ஆயத்துல்லா கொமேனி இஸ்லாமிய மத நம்பிக்கையின் அடிப்படையில் மக்களை அணிதிரட்டியமை வியட்னாமில், சீனாவில், கியூபாவில், நிக்கரகுவாவில், சோவியத்தில் புரட்சிகரச் சேனைகளாக மக்கள் பரிணமித்த விதம்; தற்போது நேப்பாள மாவோயிசவாதிகள் வறிய மக்களை அணிதிரட்டி போராளிகளாக உருவாக்கிய முறை என நீளும் இவ் வரலாற்று வரிசையில் தமிழீழமும் இறுதியாக இணைந்துள்ளது. **காலத்திற்கேற்ப, சூழலுக்கேற்ப மக்கள் படையின் அனுபவங்களை மாற்றியமைத்துத் தமிழீழம் இப்பொழுது விடுதலைப்பணியை மேற்கொள்கின்றது.**

புரட்சிகர விடுதலைப்போரின் வீரம் செறிந்த விளைநிலங்களாக சோவியத் (அன்றைய) வியட்னாம், சீனா போன்றவை அமைகின்றன. எனினும் வியட்னாமின் முன்னுதாரணமே எமக்குப் பயன்படத்தக்கனவாகக் கருதலாம். வியட்னாமின் உன்னதத் தலைவர்களான கோசிமின், ஜெனரல் கியாப் போன்றோரின் கருத்துக்கள் நாம் கவனத்தில் கொள்ளத்தக்கன. வியட்னாம் தனக்கென ஒரு இராணுவச் சிந்தனை மரபைக் கொண்டுள்ளது. இம் மரபு மிக நீளும் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போராடிய பாங்கிலிருந்து பிறக்கின்றது. அவ்வரலாற்றின் விளைபொருளாக இன்றைய சோசலிச வியடனாமியக் குடியரசு விளங்குகின்றது. தென்கிழக்காசியாவின் ஒரேயொரு கட்சி ஆட்சி முறையைக்கொண்ட பொதுவுடமை அரசென இன்றளவும் கூறப்படும் வியட்னாம் இப் பிராந்தியத்தின் மிக வேகமாக வளரும் பொருண்மியத்தைக் கொண்டதாகவுள்ளது. 2020ஆம் ஆண்டளவில் இதுவொரு வளர்ச்சியடைந்த நாடுகளின் வரிசையில் இடம்பெறும் என ஆய்வாளர்கள் அறிக்கையிடுகின்றனர். எனவே இத்தகைய வியட்னாமின் அன்றைய சூழல் இன்று எமக்கு முற்றிலுமாகப் பொருந்தாவிட்டாலும் அதன் அடிப்படை விடுதலைப்போராட்ட அணியமைப்பு எமக்குப் பயன்தரும் படிப்பினையாக அமையும்.

எனவே வியட்னாமின் வெற்றியின் இரகசியமென்ன? அதன் இராணுவச் சிந்தனை என்ன? வியட்நாமின் புகழ் பூத்த இராணுவத் தளபதி கியாப் சொல்கிறார், "13ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் மற்றும் நம்மிலும் வலியனவும் பெரியனவுமான அந்நிய ஆக்கிரமிப்புப் படைகளை எதிர்த்துப் போரிட்டு வென்று வாழ்ந்து வளர்ந்த எமது முழு வரலாற்றிலும் நமது மக்கள் பெற்ற வெற்றியின் உண்மையான இரகசியம் வருமாறு. **நாம் அனைத்து மக்களினதும் நாட்டுப் பற்றினைச் சார்ந்து நின்றோம். நாடு முழுவதும் தன் ஆற்றலை முழுமையாக வெளிக்கொணர முழு வாய்ப்பளித்தோம். முழுத் தேசத்தினையும் எழுச்சி பெறுமாறு திரட்டினோம். எதிர்ப்புப் போரில் நாடு முழுவதன் அனைத்து முன் முயற்சிகளையும் இணைத்தோம். சேனைகளையும் மக்களின் ஆயுதப் படைகளையும் மையப்படையாகக் கொண்டு அனைத்து மக்களின் எழுச்சியையும் மக்கள் யுத்தத்தினையும் நடத்தினோம். புரட்சியின் அனைத்துக் கடமைகளிலும் மக்களே அதற்குத் திடமான அடிப்படையாக அமைகின்றார்கள். மக்களின் அரசியல் படைகளே ஆயுதப்படைகளின் திடமான அடித்தளமாகும். மக்களின் ஆயுதப் படைகளே புரட்சிச்சேனையின் திடமான அடிப்படையாகும். எனவே புரட்சிகரப் போருக்குக் கணிசமான படைகளை உறுதிசெய்துகொள்ள மக்கள் யுத்தத்தின் மகத்தான ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளப் புரட்சிகர அரசியல் சேனையைக் கட்டப் பாடுபடுதல் அவசியமாகும்.**

''ehk;midj ;J kf fspdJk ;ehl Lg gw;wpidr ;
rhh;e;J epd Nwhk;ehL KOtJk ;jd ;Mw ;wiy
KOikahf ntspf ;nfhzu KO tha ggspj;Njhk; KOj ;
Njrj jpidAk ;vOr ;rp ngWkhW jpul;Ndhk; vjph;g;Gg
Nghhpy;ehL KOtjd ;midj ;J Kd ;Kaw ;rpfisAk ;
,izj Njhk; NridfisAk ;kf fspd ;MAjg ;
gilfisAk ;ikag ;gilahff ;nfhz L midj ;J
kf fspd ;vOr ;rpiaAk ;kf fs ;Aj jj jpidAk ;
elj jpNdhk;''

- n[duy ;fpahg;-

வியட்னாமின் புரட்சிகர இராணுவச் சிந்தனை பழைய போர் மரபின் வேர்களிலிருந்து தழைத்தது. 1940 - 1975ஆம் ஆண்டுக்கிடையில் பிரான்சுக்கெதிராகவும் பின்னர் அமெரிக்காவிற்கு எதிராகவும் போராடிய தீர மரபிற்கு கி.மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே வியட்னாம் சீன ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போராடிய வரலாறு வழிவகுத்தது. சீன ஆக்கிரமிப்பின் பொழுது கொல்லப்பட்டவரின் துணைவியர் (டரங் சகோதரிகள் (Trung Sisters எனப்படுவர்) கி.மு 39ஆம் ஆண்டே அணிசேர்ந்து போராடிய வரலாற்றினை வியட்னாம் எப்போதும் நினைவில் வைத்துள்ளது. கி.பி 10ஆம் நூற்றாண்டளவில் சீன ஆக்கிரமிப்பிற்கு எதிராகப் போராடி வெற்றி பெற்ற பொழுதும் 13ஆம் நூற்றாண்டளவில் மொங்கோலியருக்கு எதிராகப் போரிட்டபோதும் தங்களின் போர் மரபு தோற்றுவிட்டதாக கியாப் சொல்கின்றார். குறிப்பாக 13ஆம் நூற்றாண்டில் தேசிய வீரனாகக் கருதப்படும் டிரான் குவாக் துவான் (Tran Quoc Tuan) "ஒவ்வொருவரும் போர் வீரராவது" "தேசம் முழுவதும் படைகளில் சேர்வது" என்கிற அடிப்படையில் செயற்பட்டு கிராமக் காவற்படைகள், பிராந்தியப் படைகள் போன்றவற்றினைப் பயன்படுத்திப் போரின் தொடக்கத்திலிருந்து முடிவுவரை நிரந்தரப்படையை ஒன்றுகுவித்து சண்டைகளை நடத்தும்வேளை ஆங்காங்கு இத்தகைய மக்கள் படைகளைக் கொண்டுவித்து சிறு தாக்குதல்களைத் தொடுத்து அவற்றையும் இணைத்துக்கொண்டார். சேனைக்கு முக்கிய பாத்திரமும், தீர்மானிக்கும் திறனும் வலியுறுத்தப்பட்டபொழுதும் பெரும் எண்ணிக்கையிலான ஆயுதம் தாங்கிய மக்களும் பெரும் பங்காற்றினர். இக் காலகட்டத்தில் வியட்னாமின் இரு பழமொழிகள் உருவாகின "ஒவ்வொருவரும் போர் வீரனாவது" "எதிரி நம் வீட்டை நெருங்கினால் பெண்கள்கூட சண்டை செய்யவேண்டும்" இக்காலகட்டம் பற்றி கியாப் குறிப்பிடுகையில் "அவர்கள் மலைப்பகுதிகளில் எதிரிப் படைகளைத் தடுத்து வழிமறித்தனர். பலவீனப்படுத்தி அழித்தனர். கழிமுகப் பகுதிகளிலும் போரிட்டனர். அந்தந்த இடங்களில் எதிரியுடன் மோதினர். தத்தம் கிராமங்களைத் தளங்களாகப் பயன்படுத்தினர். எதிரிக்கு எதுவும் கிட்டாது மறைத்தனர். வெறிச்சோடிய வீடுகளையும், ஒன்றுமேயில்லாத தோட்டங்களையுமே எதிரிக்கு விட்டுச்சென்றனர்" என்கின்றார். '**சண்டைக் கிராமங்கள்**' என்கிற வழக்கு இவ்வாறு அங்கு உருவானது.



இத்தகைய பின்னணியிலே 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிரான்சியரின் ஆதிக்கத்திற்குள் சிக்கியபின் 1920களில் பொதுவுடமைக் கட்சியை உருவாக்கி கோசிமின் கியாப்பின் துணையோடு மக்கள் படையினை அடுத்த பரிமாணத்திற்கு நகர்த்தினார். வியட்னாமின் இராணுவச் சிந்தனையென்பது, மக்கள் ஒற்றுமைப்பட்டு போர்ப்பயிற்சி பெற்று போர் வீரராகி ஆயுதம் தரித்து நிரந்தரச் சேனையோடு இணைந்து போராடுதல் என்றானது. கோசிமின்னின் புகழ்பெற்ற வார்த்தைகளிவை "**ஒவ்வொரு குடிமகனும் தீரமிக்க போராளியாக வேண்டும். ஒவ்வொரு கிராமமும் அல்லது வட்டாரமும் அல்லது தெருவும் அரணாக வேண்டும். ஒவ்வொரு தொழில் நிறுவனமும் விவசாயப் பண்ணைகளும் மக்களின் விநியோக அடித்தளமாக வேண்டும். இவ்வாறு நாடு முழுவதையும் பெரும் போர்க்களமாக மாற்றி எந்த ஆக்கிரமிப்பாளர்களையும் துடைத்தெறிய முடியும்.** தேசத்தின் 3கோடி 10 இலட்சம் மக்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மூன்று கோடி பத்து இலட்சம் தீரப் போராளிகளாதல் வேண்டும்" இதனைத் தொகுத்து கியாப் சொல்கின்றார். "**இந்த இராணுவச் சிந்தனையைக் கொண்டு ஒரு சிறியநாடு சுதந்திரத்திற்கும், விடுதலைக்குமான தனது நீதியான போரில் பெரிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிக்க முடியும்**" இவ்வாறுதான் 1954ஆம் ஆண்டு, தை 07ஆம் திகதி தியன் பியன்பூ சமரில் வியட்னாமியர் பிரான்சை வென்றனர்.

இச் சமரில் மக்களின் பங்களிப்பு பிரமிக்கத்தக்கது. வடமேற்கு வியட்னாமின் மூலையில், லாவோசு நாட்டிற்கு அருகில் நெருங்கமுடியாத இயற்கை அரணாக ஆற்றுப் பள்ளத்தாக்கை அண்டி அமைக்கப்பட்ட பிரெஞ்சுப் படைத்தளம் முறியடிக்கப்படுவதற்கு ஒருசில ஆயிரம் போராளிகளோடு பல்லாயிரம் மக்கள் பங்களிப்புச் செய்தமையே காரணம். பல நூற்றுக்கணக்கான மைல் தூரம் புதிய விநியோகப் பாதை அமைத்து 105 மில்லிமீற்றர் பீரங்கிகள், 37 மில்லிமீற்றர் விமான எதிர்ப்புச் சுடுகலன்கள் உட்பட 250இற்கு மேற்பட்ட கனரக ஆயுதங்களை மக்கள் எடுத்துச்சென்ற வரலாறு இன்றளவும் நினைவில் பசுமையாக உள்ள காட்சியாகும்.

இவ்வாறாக நீளும் வியட்னாம் வரலாறு இன்று நம்பமுடியாத கனவாகவிருக்கலாம். காலத்தால் கருத்தால் இயற்கை அமைவால், சூழமைவால் அரசியற் சூழலால் வேறுபடும். எனவே வியட்னாம் வரலாறு அது பேச்சாக இருந்தாலும், போராகவிருந்தாலும் நமக்குப் போதிப்பனவாகவே அமையும். அதேவேளை "**மக்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுத்து அவர்களை ஆயுதபாணியாக்கும் பொழுது கண்மூடித்தனமாகச் செயற்படும் போக்கினைக் கைவிடல், ஆயுதத் தயாரிப்புப் பணியில் ஈடுபடும் உழைக்கும் மக்களிடை அன்றாட அரசியல் பணி செய்வதை புறக்கணிக்கும் போக்கிற்கு எதிராகப் போராடவேண்டும்.**" என கியாப் கூறியதும் நாம் கருத்தில் கொள்ளவேண்டியதுதான். எனவே நிரந்தரப் படையணி அலகுகளுக்கப்பால் மக்களைச் சிறு கரந்தடிப்படைக் குழுவாக, தற்காப்புப் படையாக, பிரதேசப் படைகளாக மக்கள் படையணி கட்டப்பட்ட முறைமையினை எமது நிலை, சூழல், கருத்திற்கேற்ப மாற்றிப் பயன்படுத்த முடியும்.

மேலும் அறிவுரையாக கியாப் சொல்கின்றார். "இராணுவ அமைப்புப் பற்றிய இக்கொள்கை ஒரு தேசத்தின் "**அனுபவக் களஞ்சியத்தில் இருப்பதில் மதிப்பு மிக்க ஆயுதமாகும்.**" நமக்கும் எதிரிக்கும் இடையில் நடக்கும் கசப்பான போராட்டத்தில் நாம் எப்போதும் திட்டவட்டமான வரலாற்று நிலைமையை ஒவ்வொரு கட்டத்திலும் அடிப்படையாகக் கொண்டு இராணுவக் கோட்பாட்டினை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்த அடிப்படையில் எம் தாய் நாட்டைக் காத்திட எம் மக்கள் முன்வந்து உழைப்பதையே இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறியதுபோல் சர்வதேசம் காண்கின்றது. மக்களையும் புலிகளையும் அன்னியப்படுத்த விரும்பியோர் இனிமேல் மக்கள் யார்? புலிகள் யார்? என்பதை அறிவதற்கே முனையவேண்டிய நிலை. விடுதலைப் போராட்டத்தின் இன்றைய பரிமாணமிது. பழைய வேர்களில் புதிய தளிர்கள்.

''xt ;nthU FbkfDk ;j Pukpf; Nghuhspahf Ntz ;Lk ; xt ;nthU
fpuhkKk ;my ;yJ tl ;lhuKk ;my ;yJ njUTk ;muzhf
Ntz ;Lk ; xt ;nthU njhopy ;epWtdKk ;tptrhag ;gz ;izfSk ;
kf fspd ;tpepNahf mbj ;jskhf Ntz ;Lk ; ,t ;thW ehL
KOtijAk ;ngUk ;Nghh;f;fskhf khw ;wp vej ;
Mf ;fpukpg;ghsh;fisAk ;Jilj ;njwpa KbAk ;''

# ராஜபக்ஷாவின் நிபுணர்குழுவும் வேண்டாம் சர்வகட்சி மகாநாடும் வேண்டாம் அவரது கொள்கைப் பிரகடனம் என்ன?

– சாரணன் –



**இலங்கை** அரசியலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சம்பந்தமான பிரகடனங்கள், வட்டமேசை மகாநாடுகள், சர்வகட்சி மகா நாடுகள், ஆணைக்குழுக்கள், நிபுணர் குழுக்கள் அனைத்துக் கட்சிகளுக்குமிடையேயான பொது உடன்பாடுகள், ஒப்பந் தங்கள், தீர்வுத் திட்டங்கள் என்பன போன்ற அனைத்துப் பதங்களையும் விடயங்களை யும் அர்த்தமற்றவை என்று வர்ணிப்பதுகூடத் தவறு, மாறாக இவை அனைத்துமே எதிர்மறையானவை என்று கூறுவதே சரியானது. இலங்கை ஜனாதிபதியாக உள்ள திரு.மகிந்த ராஜபக்ஷ தற்போது அனைத்துக்கட்சி மகாநாடு, நிபுணர்குழு புற உருவ தீர்வுத்திட்ட வரைவை தயாரித்தல் போன்ற மூன்று அரசினது விகடகவிகளை தனது நாடக மேடைக்குக் கொண்டுவந்துள்ளார். தமிழ் மக்கள் சம்பந்தமான இத்த கைய விகடகவி நாடகக் காட்சிகள் சிங்கள அரசியலில் ஒன்றும் புதிதல்ல. ஒருவேளை ஆட்சியாளர்களுக்கு நெருக் கடிகள் ஏற்படும்போது அரசாங் கத்திற்கு இறக்கப்படும் இத்த கைய விகடகவித்தனமான காட்சிகள் ஆட்சியாளர்களுக்கு ஏற்படும் உடனடி நெருக்கடி களைத் தணிக்க முதலில் உதவுவதுடன் மறுவளமாக இத்தகைய நாடகக் காட்சிகள் பிரச்சினையை ஓர் எதிர்மறை யான அந்தலைக்கு இட்டுச் சென்றும் விடுகின்றன.

கடந்த அரை நூற் றாண்டிற்கு மேலான சிங்கள அரசியல் வரலாற்றில் யாரா வது ஒரு சிங்களத் தலைவர் இதய சுத்தியுடன் தானே முன்வந்து ஒரு தீர்வை மக்கள் முன்னிலையில் முன்வைத் துள்ளாரா? இல்லை என்ற பதிலை ஒரு சிறுபிள்ளைகூடப் பட்டெனச் சொல்லிவிடும். முழு உலகின் அரசியல் நடை முறைப் போக்கின்படி பார்த் தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சித் தலைவரா யிருக்கும் ராஜபக்ஷ தனக் குரிய பொறுப்பின் படியும், தன் பதவிக்குரிய தற்துணிவு அதிகாரத்தின் படியும் தானே முன்வந்து ஒரு தீர்வை மக்கள் மத்தியில் முன்வைத்து அதற்கு அவர் ஆதரவைத் திரட்டவேண்டியதுதான் அவ ரது முதற்பணி. அல்லது அவர் தனது கட்சியின் தீர்வை முன் வைக்க வேண்டும், அல்லது அவர் தனது அரசாங்கத்தின் தீர்வை முன்வைக்க வேண் டும். இந்த மூன்றையுமோ அல்லது இந்த மூன்றில் ஏதோ ஒன்றையேனும் முன் வைக்காத ஒரு தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவரிடமிருந்து எதைத்தான் எதிர்பார்க்க முடி யும்.

அண்மைக்காலச் சிறு உதாரணம் ஒன்றை நோக்கு வோம். தற்போதைய அமெ ரிக்க ஜனாதிபதி திரு.ஜோர்ச் புஷ் இந்தியாவுடன் அணுத் தொழிநுட்பப் பரிமாற்றம் சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் ஒன்றில் முதலில் கையெழுத் திட்டார். அமெரிக்கப் பேராயத் தில் அவ்வொப்பந்தத்திற்கு ஆதரவு கிடைப்பது கடின மென்று நம்பப்பட்ட பின்னணி யில் புஷ் அதற்குக் கையெழுத் திட்டுவிட்டு அவ்வொப்பந் தத்தை முற்றிலும் நியாயப் படுத்தி ஆதரவு திரட்டத் தொடங்கினார். அதில் அவர் வெற்றிமுகம் கொண்டார். திரு. ராஜபக்ஷ அவ்வாறான ஒரு நடைமுறைப் போக்கைச் சிறி தும் கைக்கொள்ளாமல் சர்வ கட்சிப் பொது உடன்பாடு என்றும், நிபுணர்குழு என்றும் நாடகமாடுகிறார்.

தமிழ்மக்களது இனப் பிரச்சினை இப்போது நிபுணர் விசாரணைக்குழு அமைப்பு விவகாரமல்ல. மாறாக கொள் கைத் தீர்மானம் பற்றிய பிரச் சினையேயாகும்.

மாவீரர் தினமும், தமிழீழத் தேசியத் தலைவரது மாவீரர் தின உரையும் தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் உணர்ச்சிபூர்வ நிகழ்வாகவும், கொள்கைப் பிரகடன உரை யாகவும் அமைகின்றன. அதே வேளை மாவீரர்தின உரை யானது உள்நாட்டு, வெளி நாட்டு ரீதியான அரசியல் அரங்கிலும் ஊடக அரங்கிலும் அவ்வுரை விடுதலைப் புலி களது உத்தியோகபூர்வ கொள்கைப் பிரகடன உரை யாக அவதானிக்கப்படுகின் றது. அதாவது பிரித்தானியா வில் மன்னரது சிம்மாசனப் பிரசங்க உரைபோல, இலங் கையில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை போல, தமிழீழத்தில் தேசியத் தலைவரது மாவீரர்தின உரை யானது கடந்த காலங்களிலும் சரி இனிமேல் வரப்போகும் காலங்களிலும் விடுதலைப் புலிகளின் முழுநீள உத்தி யோகபூர்வ, அதிகாரபூர்வ கொள்கைப் பிரகடன உரை யாக வடிவம் பெற்றுள்ளது. இதன்படி பார்க்கையில் 2004 ஆம் ஆண்டு மாவீரர்தின உரையில் எழுப்பப்பட்டுள்ள முக்கியமான ஒரு கோரிக்கை இங்கு கவனத்திற்குரியது. அதாவது,

"ஜனாதிபதி சந்திரிகா விடமும், அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிட மும் எதிர்க் கட்சியிடமும் ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து அவர் களது மூலாதாரக் கோரிக்கை களான தாயகம், தேசியம், சுய நிர்ணய உரிமை குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப் படுத்துங்கள்'' என்பதே.

**களயதார்த்தத்திற்குப் புறம்பாக**
**"இறைமை" என்றும் "தன்னாதிக்கம்" என்றும்,**
**"பிரதேச ஒருமைப்பாடென்றும்"**
**பேசிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு வார்த்தையும்**
**ஒடுக்குமுறைக்கான பிரகடனங்களே**

இவ்வாறு விடுக்கப் பட்டுள்ள கோரிக்கைக்கு திருத்தமான, சரியான ஒரு பதிலை அளிப்பதற்குப் பதி லாக ''சமாதானத் தீர்வு'' என்றும் "கௌரவமான தீர்வு" என்றும் ''நேரடிப் பேச்சு'' என்றும் கூறி ஏமாற்றுகரமான மேற்படி நிலைப்பாட்டை எடுப் பதற்குப் பதிலாக தற்போது ஒரு கொள்கை வகைப்பட்ட பிரகடனத்தை ஜனாதிபதி தன் சார்பிலும், தனது கட்சியின் சார்பிலும், தனது கூட்டணிக் கட்சி அரசாங்கத்தின் சார்பிலும் இப்போது முன்வைப்பதற்குப் பதிலாக அனைத்துக்கட்சி மகாநாடென்றும், நிபுணர்குழு என்றும் பித்தலாட்டமாடுகிறார்.

எனவே சர்வகட்சி மகாநாடு, நிபுணர்குழு புற உருவரைவு, உள்ளுருவ வரைவு என்றெல்லாம் ஏமா ற்று வித்தைகளைப் புரியாமல் மேற்படி 2004ஆம் ஆண்டு எழுப்பப்பட்ட மாவீரர்தின உரையின் கோரிக்கைக்குப் பொருத்தமான ஒரு கொள் கைத்திட்ட பிரகடனப் பதிலைத் தான் ஜனாதிபதி ராஜபக்ஷ முன்வைக்க வேண்டும்.

களயதார்த்ததிற்குப் புறம்பாக "இறைமை" என்றும் "தன்னாதிக்கம்" என்றும் "பிர தேச ஒருமைப்பாடு" என்றும் பேசிக்கொண்டிருக்கும் ஒவ் வொரு வார்த்தையும் ஒடுக்கு முறைக்கான பிரகடனங்களே தவிர அவை சமாதான முயற்சிகளோ தீர்வுகாணும் எண்ணங்களோ அல்ல

ஒற்றையாட்சி முறை யின் கீழ் அதிகாரப் பரவ லாக்கல் என்று ஒரு காலப் பொருத்தமற்ற யதார்த்தத் திற்கு முற்றிலும் முரணான கொள்கையைக் கொண்டுள்ள ஜனாதிபதியால் ஒரு பயன் பொருத்தமான, தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க தீர்வை முன்வைக்க முடியாது. ஒற்றையாட்சி முறையின்கீழ் தீர்வைக் காணல் என்பதன் பொருள் நிர்வாகப் பரவலாக் கலே தவிர, அரசியல் அதி காரக் கைமாற்றல் அல்ல. அத்தகைய ஒரு தீர்வை, ஒற்றையாட்சி முறையின் கீழான தீர்வை, அத்தகைய நிர்வாகப் பரவலாக்கலை தமிழ்பேசும் மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழீழ மக்களது அளப்பரிய தியாகங்களின் பின்பும், அளப்பரிய இழப்புக் களின் பின்பும் ராஜபக்ஷ அரசாங்கத்தின் விகடகவி நாடகக் காட்சிகளை தமிழ் மக்கள் சினத்துடனேயே நோக்குகின்றனர்.

**ஒற்றையாட்சி முறையின்கீழ் தீர்வைக் காணல் என்பதன் பொருள் நிர்வாகப் பரவலாக்கலே தவிர, அரசியல் அதிகாரக் கைமாற்றல் அல்ல.**



# திருப்புமுனையை ஏற்படுத்தப்போகும் மக்கள் படைக் கட்டுமானம்

கடந்த சில மாதங்களாகத் தமிழ்மக்கள் மத்தியில் எழுந்துள்ள தீவிர அரசியல் எழுச்சி சிங்கள அரசைத் திகைப்பினுள் ஆழ்த்தியுள்ளது. இந்த மக்கள் எழுச்சியைக் கண்டு சர்வதேச சமூகமும் வியப்படைந்துள்ளது.

நான்கரை வருட சமாதான முயற்சிகள் கைகூடாத நிலையில், அமைதிவழி அரசியலில் நம்பிக்கை இழந்த நிலையில் தமிழ்மக்கள் அடுத்த கட்டத்தினுள் - இறுதிக் கட்டத்தினுள் நுழையும் முயற்சியாக இப்போது போர் எழுச்சி கொண்டுள்ளனர்.

வயது வேறுபாடுகள் - பால் வேறுபாடுகளுக்கு அப்பால் அனைத்து மக்களும் ஆயுதம் தூக்கிப் போராடும் இறுதி முயற்சியில் இறங்கியுள்ளனர். கிராமம் கிராமமாகத் தற்காப்புப் போர்ப்பயிற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் தற்காப்புப் பயிற்சிகள் பெறும் மக்களின் எண்ணிக்கை தொண்ணூறு விழுக்காட்டையும் தாண்டி உத்வேகம் பெற்றுவருகின்றன.

--- சு.ரவி ---

அமைதிவழியில் அரசியல் தீர்வுதேடும் வாய்ப்புகள் இனிமேல் அறவே இல்லை என்பதே மக்களின் நம்பிக்கையாக மாறிவிட்டது. அரசியல் பேச்சுக்களைச் சிங்கள அரசு சிறிதும் விரும்பவில்லை என்பதும், அதனால் சமாதான முயற்சி ஒரு மினக்கெட்ட வேலை என்றும் தமிழ்மக்களின் அபிப்பிராயங்களாக மாறிவிட்டன.

சர்வதேச அழுத்தங்களுக்கும் சிங்கள அரசு சிறிதும் செவிசாய்க்கவில்லை. சிங்கள அரசின் இந்தக் கடும்போக்கு அரசியல் நிலைப்பாட்டிற்குச் சர்வதேச சமூகமும் தண்டனைகொடுக்க விரும்பவில்லை என்ற அரசியல் யதார்த்தமும் தமிழ்மக்களை இத்தகையதொரு இறுதி முயற்சிக்குள் தள்ளிவிட்டது.

நோர்வே அனுசரணையுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடங்கிய ஆரம்பக் கட்டத்தில் தீர்வு முயற்சிகள் சாத்தியம் என்று நம்பியவர்களும் இப்போது நம்பிக்கை இழந்துவிட்டனர்.

சிங்கள அரசைப் போன்றே சர்வதேச சமூகமும் சமாதான முயற்சிகளை ஒரு நயவஞ்சக அரசியல் காய் நகர்த்தல்களாகவே கருதிச் செயற்பட்டது தமிழ்மக்களைக் கோபத்திற்குள்ளாக்கியுள்ளது.

தமிழரின் அரசியல் விடுதலைக்கான அனைத்துவகை சாத்வீகப் போராட்டங்களும் தீந்துபோன நிலையில் ஆயுதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு முப்பது வருடங்கள் முடிந்துவிட்டன. ஆனாலும் சிங்கள அரசோ இப்போதும் ஒற்றையாட்சித் தத்துவத்திலேயே நம்பிக்கை வைத்துள்ளது.

மாகாணசபை போன்றொரு அரைகுறைத் தீர்வுத்திட்டத்தையே இப்போதும் மகிந்த அரசு தமிழர்க்கு முன்மொழிய முனைகின்றது. அண்மையில் இந்தியத் தொலைக்காட்சி ஒன்றிற்கு மகிந்த ராஜபக்ச வழங்கிய செவ்வியில் இதையே அவர் வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி நிலையை வெளிக்காட்டிய போர்நிறுத்த ஒப்பந்தம் மூலம் சமபலம், சம தீர்ப்பு என்ற இராணுவ அரசியல் யதார்த்தங்களைச் சர்வதேசத்தின் முன்னிலையிலேயே ஏற்றுக்கொண்ட சிங்கள அரசு, இப்போது அவை அனைத்தையும் கைவிட்டுவிட்டு, மீண்டும் முப்பது வருடங்கள் பின்னே சென்று, பழைய தமிழ்த் தலைமைகளே நிராகரித்த ஒற்றையாட்சிக் கோட்பாடுகளை இப்போது முன்வைக்க விரும்புகின்றது.

தமிழரின் தாயகமான வடக்கு, கிழக்கில் ஏறக்குறைய எழுபது விழுக்காட்டு நிலம் புலிகளின் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இன்றுள்ளது. இந்த நிலப்பகுதிகளிலெல்லாம் புலிகளின் நடைமுறை அரசொன்று ஆழமாகக் கால்பதித்துள்ளது.

தென் இலங்கையில் நடைமுறையிலுள்ள சிங்கள அரசின் நிர்வாக இயந்திரத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் முன்னேற்றகரமான ஒரு நிர்வாக அமைப்பைப் புலிகள் இயக்கம் செம்மையாக நடாத்திவருகின்றது. இந்த உண்மையைச் சர்வதேச அவதானிகளாக விளங்கும் தொண்டு நிறுவனங்களும் - வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் ஏற்றுக்கொண்டு - பதிவாக்கியுமுள்ளனர்.

புலிகளின் படைபலமும் தரை - கடல் - வான் என்று பரந்து - பல்கிப் பெருகியுள்ளது. வெற்றிகளை வேகப்படுத்தும் கரும்புலிகள் அணியும் பெருவளர்ச்சி கண்டுள்ளது. என்றுமில்லாத வகையில் தமிழ்மக்களின் பேராதரவும் - பெரும் பங்களிப்பும் புலிகள் இயக்கத்திற்கு கிடைத்துவருகின்றது. அரசியல் - இராணுவ - பொருளாதாரம் என்ற முத்தளத்தில் தமிழரின் விடுதலைப்போராட்டம் உறுதியான நிலையை எட்டியுள்ளது.

இந்நிலையில், சர்வதேச அரசியல் ஆதரவைத் தேடும் வகையில் ஒரு நீண்ட, அரசியல் பேச்சுவார்த்தைகளுடன் கூடிய சமாதான முயற்சிகளிலும் புலிகள் இயக்கம் பங்கேற்றது.

இந்தப் பேச்சு மேசைகளில் சர்வதேச சமூகத்தைக் காட்சிக்கு வைத்துக்கொண்டு சிங்கள அரசுடன் பல்வேறு வகையான அரசியல் உடன்பாடுகளைச் செய்திருந்தது. ஆனால் ஒன்றையும் சிங்கள அரசு நடைமுறைப்படுத்திக்காட்ட முன்வரவில்லை. ரணில் அரசாங்கம் - சந்திரிக்கா அரசாங்கம் - மகிந்த அரசாங்கம் என்று சிங்களத் தரப்பில் ஆட்சிகள் மாறினவே அன்றி - சமாதான முயற்சிகளுக்குச் சாதகமாகச் சிங்களத்து அரசியல் மாறவில்லை.

நம்பிக்கை தரக்கூடிய அரசியல் முன்னேற்றங்களை எதிர்பார்த்துக் காத்திருந்த தமிழ்மக்களுக்கு, நான்கரை வருடத்தின் பின், மீண்டும் சிங்களப் பேரினவாத பூதத்தின் எழுச்சிதான் பதிலாகக் கிடைத்துள்ளது.

"சிங்கள தேசத்தை விழித்தெழவைத்து - ஒன்றிணைத்து புலிகளுக்கு எதிராகப் போர்புரிய வேண்டும்" என்று ஜே.வி.பி இராணுவ சபதம் எடுத்துள்ளது. அத்துடன் "உடனடியாகவே வடக்கு - கிழக்கு மாகாணத்தை தனியாகப் பிரிக்கவேண்டும்" என்றும் அரசியல் சபதம் எடுத்துள்ளது. இப்போது அனைத்துக்கட்சி மாநாடு - அரசியல் அமைப்பைச் சீர்திருத்த ஆலோசனைச் சபை... என்று ஜே.ஆர் காலத்து அரசியலை மீண்டும் ஒருமுறை அரங்கேற்ற மகிந்த ராஜபக்ச முனைகிறார்.

இந்த ஏமாற்று அரசியல் காரணமாக சிங்கள அரசு மீது, கடும் கோபத்துடன் தமிழ்மக்கள் உள்ளனர். இனிமேல் சிங்கள அரசை மட்டுமல்ல சர்வதேச சமூகத்தையும் நம்பமுடியாது என்கின்ற மனநிலைக்குத் தமிழ்மக்கள் வந்துவிட்டனர்.

சமாதானப் பேச்சுக்களில் வெறுப்பும் - விரக்தியும் அடைந்த தமிழ்மக்கள் "பேச்சுக்கள் இனி வேண்டாம் போரைத் தொடங்குங்கள்"என்று புலிகளின் தலைமைக்கு இடைவிடாது வேண்டுகோள் விடுத்து வந்தனர். இப்போதோ! தாமே முன்வந்து தற்காப்புப் பயிற்சிகள் பெற்று - விடுதலைப்போருக்குப் புது மெருகேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஆழ ஊடுருவும் படையணியைப் பயன்படுத்தி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள்மீது 'கிளைமோர்' தாக்குதல்களை நடாத்தி புலிகளையும் - மக்களையும் சிங்கள அரசு படுகொலை செய்துவந்தது தெரிந்ததேயாகும். இத்தகையதொரு கொலை அணியை வழிமடக்கித் தாக்கி - இரண்டு சிங்களப் படையினரைக் கொன்ற தேசியத் துணைப்படை வீரர்களையும் - மக்கள்படை உறுப்பினர் ஒருவரையும் புலிகள் இயக்கம் பாராட்டி - மதிப்பளித்திருந்தது. இந்த மக்கள் படைப்பிரிவின் வீரர்களே இப்போது வன்னி நிலப்பரப்பெங்கும் கண்காணிப்புக்களை விரிவாக்கிச் சிங்களத்தின் ஆழ ஊடுருவும் அணிகளை வேட்டையாடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தொடங்க இருக்கும் ஈழப்போர் - 04இல் சிங்களப் படைகளின் பிரதான இலக்கு பொதுமக்கள் தான். இந்தப் படுகொலைகளுக்குக் கட்டியம் கூறுவதுபோலவே அண்மைக் காலமாகத் தமிழர் தாயகம் எங்கும் படுகொலைகளைச் சிங்களப் படைகள் நிகழ்த்திவருகின்றன.

லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மீது கொழும்பில் தாக்குதல் நடாத்தப்பட்டவுடன் "ஐம்பதினாயிரம் தமிழர்கள் செத்தாலும் பரவாயில்லை உடனடியாக வன்னிமீது வான் தாக்குதல்களை - ஆட்டிலறித் தாக்குதல்களை நடாத்தவேண்டும்" என்று சிங்களத் தளபதிகள் வற்புறுத்தினர் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று (த ரைம்ஸ்) செய்தி வெளியிட்டிருந்தது. இவையெல்லாம் இனிவரும் போரில் நடைமுறைப்படுத்திக்காட்ட சிங்களப் படைத்தரப்பு எத்தனிக்கும் முயற்சிகளின் முன்னுதாரணங்களே.

இந்தக் களயதார்த்தத்தை நன்குணர்ந்தே தமிழ்மக்கள் தாமே முன்வந்து தற்காப்புப் பயிற்சிகள் பெறத் தொடங்கியுள்ளனர். அப்பாவிகளாக வீடுகளில் இருந்து சாவைச் சந்திப்பதைவிட சிங்களப் படைகளுக்கெதிராகப் போராடி வாழ்வதையே அவர்கள் விரும்புகின்றனர்.

மக்கள் எழுச்சி ஆரம்பமாகிவிட்டது. ஆயுதம் தூக்கி எதிரியைக் கொன்றழிக்கும் மனநிலைக்கும் மக்கள் வந்துவிட்டனர். ஒன்றுதிரண்டு போராடினால் வெற்றி உறுதி என்ற நம்பிக்கையுடனும் மக்கள் உள்ளனர். இனி ஒரு போர் தொடங்கும்போது மக்கள்படை புதிய வரலாற்றைப் படைக்கும் என்பது திண்ணம். □



**சமாதானப் பேச்சுக்களில் வெறுப்பும் - விரக்தியும் அடைந்த தமிழ்மக்கள் "பேச்சுக்கள் இனி வேண்டாம் போரைத் தொடங்குங்கள்" என்று புலிகளின் தலைமைக்கு இடைவிடாது வேண்டுகோள் விடுத்துவந்தனர். இப்போதோ! தாமே முன்வந்து தற்காப்புப் பயிற்சிகள் பெற்று - விடுதலைப்போருக்குப் புது மெருகேற்றிக்கொண்டிருக்கின்றனர்.**

**விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி நிலையை வெளிக்காட்டிய போர்நிறுத்த ஒப்பந்தம் மூலம் சமபலம், சம தீர்ப்பு என்ற இராணுவ அரசியல் யதார்த்தங்களைச் சர்வதேசத்தின் முன்னிலையிலேயே ஏற்றுக்கொண்ட சிங்கள அரசு, இப்போது அவை அனைத்தையும் கைவிட்டுவிட்டு, மீண்டும் முப்பது வருடங்கள் பின்னே சென்று, பழைய தமிழ்த் தலைமைகளே நிராகரித்த ஒற்றையாட்சிக் கோட்பாடுகளை இப்போது முன்வைக்க விரும்புகின்றது.**

**சிங்கள இராணுவத்தின்** போர்முனைத் தளங்களில் அதிகம் உயரமில்லாத மிகமிக மெலிந்த ஒரல்முகமும் மினுங்கும் கண்ணும் கொண்ட சிற்றுருவம் ஒன்று நடுநிசியில் உலாவித் திரியும். கழுத்தில் ஒரு நீள வெள்ளைப் பல்லிருக்கும். ஒருமுறை கண்டுவிட்டு மறுகணம் பார்த்தால் மறைந்துவிடும். சுட்டால் சூடுபிடிக்காது. வருவதுபோல் தெரிந்தால் பின் எப்படிப் போனதென்று தெரியாது. ஆயிரம்பேர் வைத்துத் தேடினாலும் கண்ணுக்குள் புலனாகாது. இப்படியொரு பிசாசு சிங்கள இராணுவத் தளத்தில் உலவுவதாகக் கதையிருந்தால் அதுதான் வீரமணி.

வீரமணியிடம் தலைமுறை தலைமுறையாக சலிக்காது கேட்கக்கூடிய வீரக்கதையிருந்தது. கற்பனைக் கதையல்ல. அவனே நாயகனாயிருந்த கதைகள். விகடம் தொனிக்க அவன் அவிட்டுவிடும் கதைகள். பச்சைப் புளுகென்று பொடியள் பழிப்பாங்கள். ஆனால் அத்தனையும் உண்மையென்றும் தெரியும். என்ன கதைச் சுவாரசியத்திற்காகக் கொஞ்சம் வால் கால் வைப்பான்.

கட்டளைத் தளபதி கேணல் பால்ராஜுக்கு செய்தி கிடைத்தது. உள்ளேயிருந்து எவரும் வரவில்லை. செய்தியுமில்லை. மறுநாளுமில்லை. நான்காம் நாள் இரு வேவுவீரர்கள் வந்துவிட்டார்கள். அவர்கள் அடிவாங்கியது, அணி குலைந்தது, தாங்கள் தப்பியது என்று நடந்ததைக் கூறினார்கள். வீரமணி இறந்திருக்கலாமென்று ஊகம் தெரிவித்தார்கள். ஐந்தாம் ஆறாம் நாளும் வீரமணி வரவில்லை. இனி உயிருடன் வீரமணி இருக்க வாய்ப்பில்லை. கொண்டுசென்ற உணவும் வந்தவர்களின் கையில்தான் இருந்தது. எனவே வீரமணி வீரச்சாவென்று தலைமைச் செயலகத்திற்குத் தகவல் அனுப்பினார் தளபதி. எட்டு, ஒன்பது என நாட்கள் நகர பத்தாம் நாள் கழித்துச் சுண்டிக்குளத்தில் சில பொதுமக்கள் காவலரணுக்கு வெளியே வந்த இரு இராணுவத்தைப் பிடித்துவிட்டதாகவும் அவர்கள் மயங்கிவிட்டதாகவும் தகவல் கிடைத்தது. அங்கே விரைந்தபோது அந்த இராணுவத்தினர் என்பது எங்கள் வீரமணியும் சக வேவுவீரனும் என்பது தெரியவந்தது. கிளிநொச்சியில்

தடுமாறிறதுக்கிடையில குண்டெறிஞ்சு வெடிக்கவைச்சார். அந்தத் திகைப்பிலிருந்து ஆமி மீளுறதுக்கிடையில என்னையும் இழுத்துக்கொண்டு மனுசன் பாய்ஞ்சிட்டான்.'' இது நடந்தது 1997இல். கிளிநொச்சி **A9** பாதை பிடிப்புக்கான இறுக்கமான ஒரு கூட்டுத்தளமாக இருந்தபோது. 2000பேர் கொண்ட கூட்டுத்தளத்தில் பட்டப்பகலில் இராணுவம் அவனைச் சல்லடைபோட்டுத் தேடியது. அவனைக் காணவேயில்லை. எங்காவது ஒரு பற்றையின் ஆழத்தில் உடலைக் குறுக்கி உயிரைப் பிடித்தவாறு பதுங்கியிருந்திருப்பான் என்றா நினைக்கிறீர்கள். வீரமணியைத் தெரிந்தால் அப்படி யாரும் நினைக்கமாட்டீர்கள். குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கச் சுகமென்று 'குஷிக்' குணத்தோடு தளத்தைச் சல்லடைபோட்டுக் குறிப்பெடுக்கத் தொடங்கியிருப்பான்.



# சாவு தயங்கிய ஒரு வீரனின் சாவு

## லெப்.கேணல் வீரமணி

(சுப்பிரமணியம் வடிவேல்)

வவுனியா

மண்ணின் மகனாக
12.07.1975

மாவீரனாக
24.05.2006

புதுப் பெடியளின் கல்விக்கூடமே அவன் கதைதான். இப்போது அவனின் கதையை எல்லாரும் சொல்லவேண்டியதாய் காலம் சபித்துவிட்டது.

கேடுகெட்ட சாவு எங்கள் வீரமணியை களமுனையில் பலிகொள்ள முடியாமல் வெட்கம்கெட்ட தனமாய் கடற்கரையில் பலிகொண்டது. அவனைக் களமுனையில் சந்திக்க சாவுக்கே துப்பில்லை, துணிச்சலில்லை. எப்படித்தான் துணிவுவரும். களமுனையில் இறுமாப்போடு இருக்கும் சாவைக் குனிந்து கும்பிடுபோடவல்லவா வைத்தான். அதற்கேது முள்ளந்தண்டு, அவனை எதிர்த்துநிற்க. பிள்ளையார் தன் கொம்பை முறித்துப் பாரதக்கதை எழுதியதுபோன்று அவன் சாவின் முள்ளந்தண்டை முறித்தல்லவா தன் குறிப்புப் புத்தகத்தில் வேவுத்தகவல் வரைந்துகொண்டு வருவான். எதையென்று சொல்வது.

மூத்த தளபதி கேணல் பால்ராஜ் சொல்கிறார், புலிகளுக்கு இருட்டாயிருந்த கிளிநொச்சி இராணுவத் தளத்தை வெளிச்சமாக்கிவிட்டவன் வீரமணிதான் என்று. அவர் என்னுடன் பகிர்ந்துகொண்டவற்றில் மறக்கமுடியாத கதையொன்று.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது புலிகள் கிளிநொச்சியிலிருந்து பின்வாங்கிய பின் இராணுவத்தின் கிளிநொச்சித்தள முன்னரங்கக் காவல்வேலியைக் கண்டுபிடிப்பதே கடினமாயிருந்தது. இராணுவ அவதானிப்பு நிலையங்கள், தொடர் ரோந்துகள் எனக் காவலரணுக்கு வெளியே எதிரி இயங்கிக்கொண்டிருந்தான். இது வழமையான எதிரியின் இராணுவச் செயற்பாட்டிலிருந்து புதுமையானதாக இருந்தது. இதனால் ஆரம்பத்தில் முன்னரங்கக் காவலரணைக் கண்டுபிடிப்பதே சிரமமான பணியாயிருந்தது. நெருங்கவிடாது வெளியே செயற்பட்டுக்கொண்டிருந்த இராணுவம் தாக்கிக்கொண்டிருந்தான். இந்த நிலமையில் இராணுவத் தளத்தினுள்ளே என்ன நடக்கிறது, தளத்தின் அமைப்பு எப்படி, ஆட்தொகை என்ன, அதன் வலு என்ன, பீரங்கிகள் எங்கே எதுவுமே தெரியாது. வேவு வீரர்களால் உள்நுழைய முடியாதவாறு நெருக்கமான காவலரண் தொடரும் அதிக தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வேவுக்கான பல முயற்சிகள் தோல்விகண்டன. அப்போது அங்கே வீரமணி தேவைப்பட்டான். வீரமணியை அழைத்து, புதுமையான ஒரு உத்தியைப் பயன்படுத்தி (அதை இங்கே குறிப்பிடுவது வேவு இரகசியத்தை அம்பலமாக்கிடும் என்பதால் தவிர்க்கப்படுகிறது) உள்ளே அனுப்ப முடிவுசெய்யப்படுகிறது. அந்தச் சவாலான உத்திக்குச் சம்மதித்து உள்ளேபோக வீரமணி சில வீரர்களுடன் தயாராகினான்.

உள்ளே வெற்றிகரமாகச் சென்றுவிட்ட வீரமணியின் அணி, இரண்டாம் நாள் எதிரியால் சுற்றிவளைக்கப்பட்டு அடிவாங்கியது. அதில் அணி குலைந்து சிதறியது. வெளியே வேவுக்கு அனுப்பிய

உள்நுழைந்து பதினொரு நாளில் சுண்டிக்குளத்தில் வெளிவந்த வீரமணி பெறுமதிவாய்ந்த தகவல்களோடும் சகிக்கமுடியாத வாழ்வனுபவத்தோடும் விலைமதிப்பற்ற படிப்பினைகளோடும் வந்தான். கிளிநொச்சி வரைபடத்தில் தளத்தின் அமைப்பை குறித்துக்கொடுத்தான் வீரமணி. புலிகளுக்குக் கிளிநொச்சி வெளிச்சமாயிற்று.

செத்துப் போனதாக இருந்த வீரமணி எப்படிச் சாகாமல் இருந்தான். அவனைப் பெற்றவள் அறியக்கூடாத கதைகள் அவை. அடிவாங்கி அணி குலைந்த பின் உடம்பில் தெம்பிருந்த இருநாளும் தளத்தைச் சுற்றிப்பார்த்துக் குறிப்பெடுத்தானாம். வெளியே வர முயன்றபோது முடியாமல் போனதாம். ஒவ்வொரு நாளும் வெளியேற புதிய இடந்தேடி அலைந்தானாம். தெம்பிழந்த உடலோடு பசியையும், தாகத்தையும், மயக்கத்தையும்




துரத்தித்துரத்தி நகர்ந்தானாம். பச்சைப் பனம்பழத்தைத் தின்றும் தங்கள் மூத்திரம் குடித்தும் தகவல் கொண்டுவந்து சேர்த்தான். மயக்கம் தெளிந்து மறுநாள் வேண்டியதை வரைபடத்தில் குறித்துக் கொடுத்தான். இருண்டிருந்த கிளிநொச்சி புலிகளுக்கு வெளிச்சமானது இப்படித்தான்.

ஐம்பதாவது இலங்கையின் சுதந்திர தினத்திற்கு கிளிநொச்சியிலிருந்து தலதாமாளிகைக்கு பஸ் விடுவோம் என்ற சிங்கள மமதைக்கு மூக்குடைக்க கிளிநொச்சியைத் தாக்கி நகரின் முற்பகுதியைக் கைப்பற்ற மூலகாரணமாக இருந்தவன் இவன்தான். ஓயாத அலை - 02இல் கிளிநொச்சித் தளத்தைத் தாக்கியழிக்க வேவு தொடக்கம் சமரில் மையத்தளத்திற்கான தாக்குதல் வரை முக்கிய பங்கெடுத்த வீரமணிக்கு கிளிநொச்சி விடுதலையில் உரிமையுண்டு. தொண்ணூறின் பின் வன்னியில் அவன் காணாத யுத்தகளமும் இல்லை, இவன் வேவுபார்க்காத இராணுவத் தளமும் இல்லை.

ஒரு போராளி சொன்னான். ''என்னைப் பத்தைக்குள்ள இருக்கச் சொல்லிவிட்டு மனுசன் கைக்குண்டோட கிளிநொச்சி கண்ணன் கோயிலுக்குப்போற றோட்டக் கடந்தான். கடக்கவும் சில ஆமிக்காரங்கள் முடக்கால வாறாங்கள். துலைஞ்சுது கதை. ஓடவேண்டியதுதான் எண்டு நினைக்க மனுசன் ஓடேல்ல. கைக்குண்டோட ஆமீன்ர பக்கம் பாய்ஞ்சு 'அத்த உசப்பாங்' என்று கத்தினார். வந்த ஆமி சுடுறதோ இல்ல அவன்ர கட்டளைக்குக் கைய மேல தூக்கிறதோ எண்டு

''மஞ்சுளா பேக்கரிச் சந்திக்கு இடக்கைப் பக்கமா கொஞ்சம் முன்னுக்கு பழைய சந்தைக்குப் பின்னால நாயுண்ணிப் பத்தை காடாக் கிடந்திது. நாங்கள் பகல் படுக்கைக்கு அந்த இடத்தத் தெரிஞ்செடுத்து குடைஞ்சுபோய் நடுவில கிடந்து துவக்கக் கழட்டித் துப்பரவு செய்துகொண்டிருந்தம். ஆமி றோட்டால 'ரக்ரரில' போனவங்கள், நிப்பாட்டிப்போட்டு இறங்கி வாறாங்கள். அவங்கள் பத்தையக் குடைஞ்சுகொண்டும் வாறாங்கள். நாயுண்ணிப் பத்தையின்ர கீழ்ச் சருகெல்லாம் கொட்டுப்பட்டு கீழ வெளியாயும் மேல பத்தையாயுமிருந்தது. அவங்கள் கண்டிட்டாங்கள் எண்டு நினைக்க, இந்த மனுசன் 'அறுவார் நித்திரைகொள்ளவும் விடாங்கள்போல கிடக்கு'. எண்டு குண்டுக் கிளிப்பக் கழட்டினபடி முணுமுணுத்தான். பிறகு பாத்தா அவங்கள் எங்களச் சுத்தியிருந்த மரந் தடியள இழுத்துக்கொண்டுபோய் ரக்ரர் பெட்டியில ஏத்திறாங்கள், விறகுக்கு. வீரமணியண்ண ஒண்டுக்கும் கிறுங்கான். எங்கையும் சிரிப்பும் பகிடியும்தான்.''

''வீரமணி அண்ணையோட வேவுக்குப் போறதெண்டால் எந்தப் பதட்டமும் இல்லை. படுத்தால், எழுந்தால், நிண்டால், நடந்தால் ஒரே பகிடிதான். சாகிறதெண்டாலும் மனுசன் சிரிப்புக் காட்டிப்போட்டுத்தான் சாவான்.'' சொல்லிப்போட்டு வானத்தைப் பார்த்தான் அவன் 'ச்சா வீணா இழந்திட்டம்.'

வீரமணியோடு நின்றவர்கள் கதை கதையாகச் சொல்கிறார்கள். வீரமணி இல்லை என்றது மனதில் ஒட்டிக்கொள்ளவே மறுக்கிறது. அவர்கள் சொல்வதைக் கேட்டால் யுத்தகளத்தில் வீரமணியைச் சாகடிப்பது சாவுக்கு முடியாத காரியம் எனத் தெரியும்.

வேறொரு போராளி சொன்னான், ''மன்னாரில் எடிபல நடவடிக்கைக்கு முன் ஒருநாள் ஆமியின் தளத்தினுள் நுழைவதற்காகப் போய்க்கொண்டிருந்தோம். ஒரு பெரும் வெட்டையையும் நீரேரிப் பக்கவாட்டையும் கடந்து சென்றுவிட்டோம். இராணுவத்தின் தடைக்குள்போக (மிதிவெடி, முட்கம்பிவேலி கொண்ட பிரதேசம்) இன்னும் கொஞ்சத்தூரம் இருந்தது. அதைக் கடந்துதான் காவலரண்களை ஊடறுத்து உள்ளே போகவேண்டும். ஆனால் இப்போதே எங்களைக் கண்டுவிட்டு எதிரியின் ஒரு அணி காவலரணுக்கு வெளியே இடப்புறமாக நகர்ந்தது. எதிரி எம்மைக் கண்டுவிட்டு சுற்றிவளைக்கிறான் என்பதை வீரமணியண்ணை கண்டுவிட்டான். எங்களுக்குப் பின்னால் பெரிய வெட்டை. வலப்புறம் நீரேரி. இடப்புறம் இராணுவ அணி சுற்றிவளைக்கிறது. திரும்பி ஓடுவதுதான் ஒரே ஒரு மார்க்கம் என நான் நினைத்திருக்க, வீரமணியண்ண 'ஓடுங்கடா தடைக்குள்ள' என்றுவிட்டு இராணுவக் காவலரண் தடைக்குள் ஓடினான். முட்கம்பிகளுக்கும் மிதிவெடிகளுக்கும் இடையில் நாம்போய்

இருந்துகொண்டோம். சுற்றிவளைத்த இராணுவ அணி எங்களைத் தேடியது. நாம் எப்படி மறைந்தோமென்று அவனுக்குத் திகைப்பு. இப்படியும் ஒரு உத்தியிருப்பதை அன்று வீரமணியண்ணையிடம் படித்தேன். சுற்றிவளைத்த அணி தளம் திரும்புமுன் நாங்கள் காவலரண்களைக் கடந்து உள்ளே நுழைந்துவிட்டோம்.'' எதிரியால் இதை கற்பனை செய்யவும் முடியாது.

அஞ்சலிக் குறிப்பேட்டில் நினைவுக்குறிப்பு எழுதுகிறார் மூத்த தளபதி கேணல் பால்ராஜ். "ஒரு தடவை, ஆனையிறவு முகாமை வேவு பார்க்கவென எதிரியின் காவலரணை ஊடறுத்துச் செல்ல ஆறு தடைகளைக் கடந்த வீரமணி இறுதியாக மண் அணையைக் கடக்க முயன்றபோது ஆமி துவக்கை நீட்டினான். உடனே வீரமணி சிங்களத்தில் ஏதோசொல்லி வெருட்ட அவன் சுடுவதை நிறுத்துகிறான். எதிரியின் குகைக்குள்ளேயே நின்று எதிரியைச் சுடவேண்டாமெனக் கட்டளையிட்டு எதிரியின் பிரதேசத்தை வேவு பார்க்கச் சென்றவன் வீரமணி.''

இப்போது சாள்ஸ் அன்ரனி சிறப்புத் தளபதி கோபித் சொன்னார், "வீரமணியினுடைய தலைமையில் வேவுபார்க்கச் சென்றோம். திரும்பிச் சுட்டதீவால் வந்துகொண்டிருந்தபோது தண்ணிக்குள்ளால் நீரேரியைக் கடந்துதான் போகவேணுமெண்டு வீரமணி சொன்னான். நடக்கக்கூடிய காரியமா? மிகச் சுலபமா ஆமி காணுவான். பிரச்சினை என்னெண்டா தண்ணீர நடுவுக்குள்ள குத்தி நட்டு பரண் கட்டி ஆமீன்ர அவதானிப்பு நிலையமொன்று இருந்தது. அதில இருந்து பார்த்தா தண்ணிக்குள்ள மீன் துள்ளினாலும் தெரியும். கரையில எலி ஓடினாலும் தெரியும். என்னெண்டு போறது உதுக்குள்ளால எண்டு கேட்டன். 'வா. அவன் ஒண்டும் செய்யான்' என்று சொல்லிவிட்டு முன்னே நடந்தான். நேர ஆமீன்ர பரணைநோக்கி நடந்து பரணுக்குக் கீழயும் வந்திட்டம். நடுக்கமாயிருந்திது. நாங்கள் கீழ வரவும் ஆமி பரண்கால் குத்தியில தட்டினான். நின்றுவிட்டு வீரமணி ஏணியால ஏறி 'கௌத' என்றான். பின் ஆமியோட சிங்களத்தில ஏதோ சொல்லிவிட்டு இறங்கிவந்தான். எங்களுக்கு நெஞ்சுக் குழிக்குள் நீர் வற்றிப்போயிற்று. ரெண்டுபேர் கிடக்கிறாங்கள் ஒருத்தன் இருக்கிறான் என்று சொன்னான். தளம் திரும்பியதும் அவனிடம் கேட்டோம் வீரமணி சொன்னவை மிகப்பெரும் வேவுப் பாடநெறிகள்.

"எங்களுக்கு ஆபத்து வருமென்றால் அதை எதிரியின் காலுக்குள்ளபோய் நின்று ஆபத்தை பெருப்பித்துக் கொண்டால் ஆபத்தேயில்லை. இது மிகக் குழப்பமாக இருந்தாலும் வீரமணி சொல்லித்தந்த பாடம் அதுதான். வேவுக்காரர்களைப் பொறுத்தவரை எங்களைச் சுட்டால் தானும் சாகவேண்டுமென்ற நிலையை எதிரிக்குத் தோற்றுவித்தால் அவன் தன்னைக் காப்பாற்ற முடிவெடுப்பானே தவிர எங்களைக் கொல்லவல்ல. தூரத்தே நாங்கள் நகர்ந்தால் அவன் அணிகளை ஒருங்கிணைத்து எங்களைத் தாக்க முயற்சிப்பான். எந்தப் போர்வீரனும் தான் சாகாமல் எதிரியைக் கொல்லத்தான் விரும்புவான். தனது சாவும் நிச்சயம் எங்களுடைய சாவும் நிச்சயமென்றால் இந்தச் சிங்கள ஆமி சுடான்.'' வீரமணியுடன் இருந்தாலே போரில் எத்தனையோ நுட்பங்களையும் நூதனங்களையும் படித்துக்கொள்ளலாம். அவன்தான் இல்லையே.

வீரமணியின் பலம் என்னவென்றால் அவனுக்கு ஆமியைத் தெரியும் என்பதுதான். ஆமி எப்பொழுது என்ன செய்வான், என்ன செய்யமாட்டான், பலமென்ன, பலவீனம் என்ன, எந்தநேரம் என்ன தீர்மானம் எடுப்பான் என்பது வீரமணிக்கு நன்றாகத்தெரியும். ஏனென்றால் அவன் எதிரித் தளங்களுக்குள் வாழ்ந்தகாலம் அதிகம். ஆமிக்காரனின் அந்தரங்கமான 'கசமுசா'க்களையும் வப்புக் கதையாக்கி எப்பொழுதும் தன்னைச்சுற்றிச் சிரிக்கும் கூட்டத்தை வைத்திருப்பான்.

இவனது வேவுத்திறமையும் சண்டையில் தன் அணியினரைத் துணிச்சலும் நம்பிக்கையும் கொண்டவர்களாக வழிநடத்தும் ஆளுமையையும் பார்த்த மூத்த தளபதி தீபன் இவனை ஒரு போர்முனைத் தளபதியாகத் தலைவருக்கு அறிமுகம் செய்தார்.

ஓயாத அலை - 03 ஒட்டுசுட்டானில் தொடங்கியபோது தன் அணிப் போராளிகளுடன் புறப்படு தளத்தில் வைத்து வீரமணி கதைத்தான் "பெடியள்! நான் ஒன்றச் சொல்லித்தாறன் ஞாபகம் வைச்சிருங்கோ. தடையள உடைச்சுக்கொண்டு ஆமீன்ர காப்பரணுக்க குதிச்ச உடன 'அத்த உசப்பாங்' என்று பலத்துக் கத்துங்கோ. ஆமி கையைத் தூக்கேலையென்றால் குண்டை எறிஞ்சிட்டுச் சுட்டுப் பொசுக்குங்கோ. ஞாபகம் வைச்சிருங்கோ ஆமிய சரணடையச் சொல்லுறத்துக்கு 'அத்த உசப்பாங்' என்று சொல்லவேண்ணும்'' இப்படி சண்டை தொடங்கமுன் பொதுவாக போராளிகளிடம் இருக்கக்கூடிய இனம்புரியாத பதட்டம் அழுத்தம் என்பவற்றிற்குப் பதிலாக ஆர்வத்தையும் துணிச்சலையும் தூண்டிவிடும் உளநுட்பம் வீரமணிக்குத்தான் கைகூடிவரும்.

ஓயாத அலை - 03இல் ஆனையிறவுத் தளத்தைத் தாக்கியழிக்க முடிவு செய்தபோது மையப்பகுதியைத் தனிமைப் படுத்துவதற்காக முதல்கட்டத்தில் பரந்தன் உமையாள்புரத்தையும்

**கூட்டத்தில் ஆங்காங்கே விம்மல்கள் வெடிக்கின்றன.**
**விடுதலைப்போரில் ஐம்பது யுத்தகளம் கண்ட**
**ஒரு அசகாய வீரன்**
**அமைதியாய் படுத்திருப்பது**
**எங்களை என்னவோ செய்தது.**
**மூத்த தளபதி கேணல் பால்ராஜ் நினைவுரையாற்றினார்.**
**"கடலில் மீனுக்குக் குண்டடித்து**
**வீரமணிக்குக் காயம் என்றார்கள்.**
**அதிர்ந்துபோனேன்.**
**சரி காயம்தானே என்றுவிட்டிருக்கக்**
**கையில்லையாம் என்றார்கள்.**
**கையில்லாவிட்டாலும் பரவாயில்லை**
**வரட்டும் என்றிருந்தேன்.**
**கொஞ்ச நேரத்தில் நிலைமை**
**மோசமாக இருப்பதாகச் சொன்னார்கள்.**
**உயிர்தப்பினாலே போதுமென்று ஏக்கமாக இருந்தது.**
**இறுதியாய் வீரமணி செத்துவிட்டான்**
**என்று செய்தி சொன்னார்கள்.''**

பக்கவாட்டாக வெற்றிலைக்கேணியையும் கைப்பற்ற தலைவர் திட்டமிட்டார். ஆனால் வெற்றிலைகேணி புல்லாவெளி கைப்பற்றப்பட பரந்தன் தாக்குதலோ வெற்றியளிக்கவில்லை. பின்னர் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தலைமையில் பரந்தன் மீது தாக்குதல் தொடுக்க முடிவுசெய்யப்பட்டது. பகலில் சமரைத் தொடங்கத் தலைவருடன் ஆலோசித்து வந்த கேணல் தீபன் அத்தகைய ஒரு அபாயமான சமரைத் தொடங்க வீரமணியை அழைத்தார். ஆட்லறி, ராங்கிகளை வழிநடத்தும் ஒரு மரபுப்படைக்கு அதுவும் தற்காப்பு யுத்தத்தில் மிக வசதியாக இருக்கும். ஆனாலும் பகலில் யுத்தத்தை எதிர்பார்க்காத எதிரி மீது முதல்முறையாகச் செய்யப்படும் பகல்பொழுதுத் தாக்குதல் வெற்றியளிக்க வாய்ப்புள்ளது என தளபதி தீர்மானித்தார். ஓயாத அலைகள் இரண்டில் எதிரியின் முறியடிப்பை மீள முறியடிக்க ஒரு எத்தனிப்பைச் செய்து வெற்றி காணப்பட்டது. அதில் ஒரு அணித் தளபதியாக களமிறங்கியவன் வீரமணி. இப்போது பகலில் தொடங்கப்படும் சமரிற்கு வீரமணியை ஒரு பகுதித்

**தமிழீழத் தேசியத் தலைவருடன் தளபதி வீரமணி**



தலைவனாக நியமித்தார் தளபதி தீபன். வீரமணி சென்றான் வென்றான்.

கட்டளைத் தளபதி தீபன் சொல்கிறார். "அந்தத் தாக்குதலின் ஒரு கட்டத்தில் வீரமணி பிடித்த காவலரண்களை எதிரியின் ராங்கியணி வந்து சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது. அந்த இடத்தில் வீரமணிக்குள்ள தெரிவு, அணிகளைப் பாதுகாப்பாகக் கொண்டு பின்வாங்கவேண்டும் அல்லது காப்பகழிகளிலிருந்து வெளியேறி ராங்கிகளை எதிர்கொள்ள வேண்டும். வீரமணி தன் சிறிய அணியை வைத்து அந்த ராங்கி அணியை முறியடித்தான். அதுதான் வெற்றியை எங்களுக்குத் தந்தது. ஒரு பகல் பொழுதில் பரந்தன் எங்கள் வசமாயிற்று.

ஓயாத அலைகள் மூன்றில் தென்மராட்சிக்குள்ளால் நுழைந்த புலிகள் யாழ். அரியாலை வரை முன்னேறியிருந்தனர். யாழ். அரியாலையில் வீரமணி தன் அணிகளுடன் நிலைகொண்டிருந்த போது புதிதாக யாழ். தளபதியாக நியமனம் பெற்ற சரத் பொன்சேகா கினிகிர என்ற ஒரு இராணுவ நடவடிக்கையை அரியாலை ஊடாகத் தொடக்கினார். வீரமணி தன் அணிகளோடு அதற்கு எதிராகச் சண்டையிட்டான். தகவல் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி சிறப்புத் தளபதிக்குக் கிடைத்தது. அவர் விரைந்து அங்கே போகவும் அதற்கிடையில் அந்த நடவடிக்கையை வீரமணி முடிக்கவும் சரியாக இருந்தது.

நூற்றுவரையில் இராணுவ உடல்களும் பலநூறு காயமடைந்த சிப்பாய்களும் கொழும்பிற்குப் போக தலைமையகத்தின் உத்தரவின்றித் தன்னிச்சையாகச் செய்யப்பட்ட நடவடிக்கையின் தோல்விக்காக சரத் பொன்சேகா யாழ். தளபதிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். வீரமணியை, அவனது தனித் திறமையைத் தலைவர் பாராட்டினார்.

வீரமணி புகழ்பூத்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் துணைத் தளபதியானான். பின்னர் அப்படையணியின் சிறப்புத் தளபதியுமானான். 1990ஆம் ஆண்டு மாங்குளத் தாக்குதலில் காவும் குழுவாக முதற் பங்கேற்றவன் 2001இல் தீச்சுவாலையில் சிறப்புத் தளபதியாக தன் ஐம்பதாவது களத்தைக் கண்டான். தன்னுடலில் எட்டுத்தடைவை காயமுற்றான்

இறுதியாக நாகர்கோவில் களமுனைக்கு பகுதித் தளபதியாக இருந்தபோது போராளிகளைப் பார்க்க பலகாரம் கொண்டுசெல்லும் மக்கள்முன் வீரமணி பேசினான். 'சரத் பொன்சேகாவின் யாழ். தளபதிப் பதவியை முதல் பறிச்சது நான்தான். இப்ப இராணுவத் தளபதிப் பதவியில் இருந்து சண்டைக்குத் திமிறுறான். சண்டையைத் தொடக்கினால் இவன இராணுவத்தை விட்டே கலைக்கவைப்பன்'.

வெயில் சரியாக சாய்ந்திராத ஒரு பின்னேரப்பொழுது. மக்களும் போராளிகளும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் திரண்டிருக்க, வீரமணியைப்

**நண்பன் கு.கவியழகன்**

பேழையில் படுத்தியவாறு தூக்கிவந்தார்கள். மனைவி வீரமணியைக் கட்டிப்பிடித்துக் கதறிக்கொண்டிருந்தாள். கூட்டத்தில் ஆங்காங்கே விம்மல்கள் வெடிக்கின்றன. விடுதலைப்போரில் ஐம்பது யுத்தகளம் கண்ட ஒரு அசகாய வீரன் அமைதியாய் படுத்திருப்பது எங்களை என்னவோ செய்தது. மூத்த தளபதி கேணல் பால்ராஜ் நினைவுரையாற்றினார். "கடலில் மீனுக்குக் குண்டடித்து வீரமணிக்குக் காயம் என்றார்கள். அதிர்ந்துபோனேன். சரி காயம்தானே என்றுவிட்டிருக்கக் கையில்லையாம் என்றார்கள். கையில்லாவிட்டாலும் பரவாயில்லை வரட்டும் என்றிருந்தேன். கொஞ்ச நேரத்தில் நிலைமை மோசமாக இருப்பதாகச் சொன்னார்கள். உயிர்தப்பினாலே போதுமென்று ஏக்கமாக இருந்தது. இறுதியாய் வீரமணி செத்துவிட்டான் என்று செய்தி சொன்னார்கள்.''

சாவுக்குத்தான் மனிதர்கள் அஞ்சுவார்கள். சாவு வீரமணிக்கு அஞ்சி கோழைத்தனமாய் அவனைக் கொன்றுவிட்டது. எந்த இரக்கமும் தர்மமுமில்லாமல் மகத்தான ஒரு போர்வீரனைக் கடற்கரையில் வைத்து வீழ்த்திவிட்டது. நடமாடும் ஒரு வேவுக்கல்லூரி சத்தமில்லாமல் நொருக்கப்பட்டுவிட்டது. புதைகுழிக்கு மண்போட்டு எல்லாம் முடிந்தது. இனி வீரமணி வரமாட்டான் என்றது மனதில் திரும்பவும் உறைக்கின்றது.

வீட்டில் அந்தியேட்டிக்காகப் போயிருந்தோம். 'தொப்'பென்று சத்தம் கேட்க உள்ளே என்ன நடந்தது என்று பார்த்தோம். வீரமணியின் படம் விழுந்து கண்ணாடி உடைந்துவிட்டது என்றார்கள். பக்கத்தில் இருந்தவர் சொன்னார். 'படத்துக்கு அஞ்சலி செலுத்தேக்க படத்தில அவன் உயிரோட இருந்ததைக் கண்டனான். அவன் வெளியே வர எத்தனிச்சுத்தான் கண்ணாடி உடைஞ்சிருக்கவேணும்.' திரும்பி அவரின் முகத்தைப் பார்த்தேன். முகம் குலைந்து சோகத்தில் தொங்கியிருந்தது. எல்லோருக்கும் அதுதான் நப்பாசை. வீரமணி திரும்பி வந்தாலென்ன?

ஆனால் வன்னிக்களத்தில் நின்ற சிங்கள ஆமியைப் பொறுத்தவரை இரவில் தங்கள் தளங்களில் அலைந்துதிரியும் மெல்லிசும், ஒரல் முகமும் இளைய வயதும் மினுங்கும் கண்களும் கழுத்தில் ஒரு நீள வெள்ளைப் பல்லும் கொண்ட மாயப்பிசாசு - சுட எத்தனித்தால் "அத்த உசப்பாங்" என்று கீச்சிடக் கத்திவிட்டு மாயமாய்க் குண்டை வெடிக்கவைத்து மறைந்துபோகும் மர்மப் பிசாசு செத்துப்போய்விட்டது. பிசாசுகாகப் பிக்குவிடம் மந்திரித்துக் கழுத்தில் கட்டிய தாயத்து இனித் தேவையில்லை என்றும் அவர்கள் ஆறுதலடையக்கூடும்.

**"உண்மையில் எமது போராட்டத்தின் வெற்றி உலகத்தின் கைகளில் தங்கியிருக்கவில்லை. எமது வெற்றியானது எமது கையில், எமது பலத்தில், எமது உறுதிப்பாட்டிலேயே தங்கியிருக்கின்றது. நீதியும் நியாயமும் எமது பக்கமாக இருந்தால் மட்டும் போதாது. நாம் வலிமை பெற்றவர்களாக இருக்கவேண்டும் போராடும் திறமை பெற்றவர்களாக இருக்கவேண்டும்."**

**- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -**

# மக்கள் படையும் விடுதலைப் போரும்

- கலாநிதி -
க.சோமாஸ்கந்தன்

தமிழீழ மக்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் போக்கு மிக அண்மையில் தோன்றியுள்ளது. சமதானச் சுகவாழ்வை விரும்பும் அமைதிப் பிரியர்களாக மக்களையும், போரைக் குறியாகக் கொண்டவர்களாகவும் சமரசத் தீர்வுக்கு ஒத்துவராதவர்களாகவும் புலிகளையும் சித்தரிக்கும் முனைப்புக் காணப்படுகின்றது. இவ்வாறான கருத்துநிலை ஒரு வஞ்சக உள்நோக்கத்தினைக் கொண்டது. புலிகளைப் புறந்தள்ளிவிட்டால் தாம் நினைத்த காரியத்தினைச் சாதித்துவிடலாம் என்று சிங்கள அரசும் சர்வதேச சமூகமும் நினைக்கின்றன. ஆனால் அவர்களுடைய திட்டம் நிறைவேறப் போவதில்லை.

ஒரு தனிமனிதனும் சரி, ஒரு நாடும் சரி தமது விதியைத் தம் செயல்களாலேயே தீர்மானிக்கிறார்கள். அவர்களது கடந்தகாலச் செய்கைகள் நிகழ்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. நிகழ்காலத்தியச் செய்கைகள் வருங்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. செயலின் விளையும் அதற்கான காரணமும் மேற்கூறிய கோட்பாட்டின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. முந்தைய செயல்கள் நிகழ்காலத்தினைத் தீர்மானிக்கின்றன. சிறிலங்காவின் முன்வினை மிகவும் சக்தி வாய்ந்தது. தமிழர்கள் ஆரம்பத்தில் மிகவும் சாதுவானவர்கள் என்பது உண்மையே. அவர்களை ஆயுதம் தூக்கிப் போராடவைத்த காரணம் என்ன? சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள். அமைதி வழியில் உரிமைகளை வென்றெடுங்கள் என்று உபதேசம் செய்யும் சர்வதேசம் எமது பிரச்சினையை வரலாற்றுக் கண்கொண்டு பார்க்கத் தவறிவிட்டது.

எண்ணிக்கை அடிப்படையில் தம்மைப் பெரும்பான்மையினர் எனக் கருதும் சிங்களவர்கள் எண்ணிக்கையில் குறைந்த தமிழர்கள் மீது ஆதிக்கம் செலுத்த விளைவதைத் தமிழ்மக்கள் ஏற்கத் தயாரில்லை. சிங்களத் தலைமையிலான இறைமை நாட்டின் மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்து பல தசாப்தங்களாகின்றன. அரசிற்குச் சொந்தமான ஆயுதப்படைகள் தமிழர்களைக் கொல்வதற்கு பயன்படுத்தப்படுகின்றன. ஆயுதப்படைகள் செய்யும் மனித உரிமை மீறல்களையும், பிற அட்டூழியங்களையும் அரச இயந்திரம் மூடி மறைக்கின்றது. சிங்கள நீதிமன்றங்களில் நீதி கிடைப்பதில்லை. கொழும்பு ஊடகங்கள் தமிழருக்கு எதிரான கருத்துப் போரைத் தொடர்ச்சியாக நடத்துகின்றன. ஒற்றையாட்சியைத் தமிழர்கள் ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. அதிலிருந்து விடுபடுவதற்காகவே எமது விடுதலைப்போர் நடத்தப்படுகின்றது.


ஈழத்தமிழர்களின் பிரிவினை உணர்வு செயற்கையானதல்ல. நாம் தனியரசாக வரலாறு அறியப்பட்ட காலம்தொட்டு இருந்துள்ளோம். நிர்வாக அனுகூலத்திற்காக பிரிட்டிசார் எம்மை 1833இல் நில அடையாளம் இழக்கச் செய்துள்ளனர். 1795இற்கும் 1833 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 'கலக்ரேறற்' (COLLECTORATE) என்ற ஆட்சிமுறை நிலவியது. கோல்புறுக் - கமரன் (COLEBROOKE - CAMERON) சீர்திருத்தங்களுக்குப் பின் இந்த ஆட்சிமுறை நிறுத்தப்பட்டு இலங்கைத்தீவு 5மாகாணங்களாக வகுக்கப்பட்டது. புதிய யாழ்ப்பாண மாகாணத்தில், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு உள்ளிட்ட வன்னி மாவட்டங்களும் கண்டிப் பகுதியின் நுவரகலாவியா மாவட்டமும் இணைக்கப்பட்டன. யாழ்.மாவட்டத்திற்குரிய செயலகங்கள் (கச்சேரிகள்) யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய நகரங்களில் திறக்கப்பட்டன. (NORTHERN CEYLON (SRILANKA) IN THE 19th CENTURY BY PROF BERTRAM BASTIAM -PILLAI GOD AGE INTERNANIONAL PUBLISHERS, 2006)

அடிமைப்பட்ட இனத்தின் மீட்பர்களாக விடுதலை இயக்கங்கள் தோன்றுகின்றன. அவை விடுதலை வேண்டி நிற்கும் மக்கள் மத்தியிலிருந்தே தோற்றம் பெறுகின்றன. சுருங்கக்கூறின் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மக்கள் மத்தியிலிருந்து விடுதலை இயக்கங்கள் பிறப்பெடுக்கின்றன. வெறுமையில் இருந்து விடுதலை அமைப்புக்கள் தோன்றுவதில்லை. அடக்குமுறைக்கு எதிராகப் போரிடும் அமைப்பை மக்களே உருவாக்குகின்றார்கள். விடுதலை அமைப்பும் மக்களும் வேறானவை அல்ல. இருகூறும் ஒன்றுதான். இதுதான் வரலாற்று நியதி. சிறிலங்காவிற்கான நெதர்லாந்துத் தூதுவர் ரேனாட் வாண்டிக் (REYNOUT VANDIJK) இவ்வருட யூன் மாத முற்பகுதியில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையிலான நெருக்கத்தினை பின்வருமாறு விளக்கினார்.

ஒரு காரணமும் இல்லாமல் இத்தீவில் தமிழீழ விடுதலைப்புலிகள் உருவாகவில்லை. அவர்கள் இவ்வளவு பலம் வாய்ந்தவர்களாக இருப்பதற்கு வரலாற்று விளக்கங்கள் இருக்கின்றன. தமிழ்மக்களின் பேராதரவின்றி புலிகள் இந்த உயர்நிலைக்கு வளர்ச்சி கண்டிருக்க முடியாது. அவர்களை ஒரு வலுவான சக்தியென்று ஏற்றுக்கொண்டு அவர்களோடு பேசவேண்டும். தவறினால் அது அறியாமையாகவோ, அரசியல் சிறுபிள்ளைத் தனமாகவோ இருக்கும். அவ்வளவோடு அவர் நிற்கவில்லை. 'தமிழ்மக்களுடைய கோரிக்கைகள் இனங்காணப்பட்டு நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது சட்டத்தின் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடையாது என்று அவர்கள் உணர நேர்ந்தால் மீண்டும் புலிகளின் பாதுகாப்பினைத் தேடுவார்கள்'. இந்த இடத்தில் அவர் ஒரு விடயத்தை மிக அழுத்தமும் திருத்தமுமாகக் கூறினார். "மிகவும் இக்கட்டான நேரங்களில் அவர்கள் புலிகளின் பாதுகாப்பை நாடுவார்கள்."

ஒரு நாடோ அதன் ஒரு பகுதியோ பிற நாடொன்றால் அல்லது அதேநாட்டின் இன்னொரு பகுதியால் ஆக்கிரமிக்கப்படும் போது பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பைக் காட்டுவார்கள். இந்த எதிர்ப்பு றெசிஸ்ரன்ஸ் (RESISTANCE) என்று அழைக்கப்படும். மக்களின் இன்னொரு பகுதியினர் ஆக்கிரமிப்பாளர்களுடன் இணைந்து செயற்படுவார்கள். இவர்களை 'கொலாபெரேற்ரர்ஸ்' (COLLABORTORS) என்று அழைப்பார்கள். எதிரிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அனைவரும் இவ்வாறு அழைக்கப் படுகின்றார்கள். இரு பகுதியினரும் அதாவது எதிர்ப்பவர்களும் ஒத்துழைப்பு வழங்குபவர் களும் மக்கள் மத்தியிலிருந்து தோற்றம் பெறுகின்றனர். எதிர்ப்பு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நடைபெறும். ஒரு கட்டம் வரும்போது மறைமுக எதிர்ப்பு வெளிப்படையானதாக மாறும். அனைத்து மக்களும் கிளர்ந்தெழும்போது எதிர்ப்பு முழுவடிவம் பெறும்.

பிரான்சு 1940 - 1944 காலப் பகுதியில் ஜேர்மன் நாசிப்படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. அப்போது ஒருபுறம் எதிர்ப்பாளர்களும் மறுபுறம் ஒத்துழைப்பாளர்களும் அணிதிரண்டனர். எதிர்ப்பியக்கத் தலைவர் டி கோல் (DE GAULLE) தனது தலைமைப்பீடத்தை இங்கிலாந்துத் தலைநகர் இலண்டனில் ஏற்படுத்தினார். அங்கிருந்து அவர் எதிர்ப்பியக்கத்தினை வழிநடத்தினார். அதே சமயத்தில் முதலாம் உலகப்போரில் பிரான்சின் அதி உயர் தளபதிகளில் ஒருவராக இருந்த மார்சல் பெத்தேயின் (MARSHALL PETAIN) ஜேர்மன் படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். அதாவது முதலாம் உலகப்போரில் ஜேர்மன் படைகளை எதிர்த்துப் போராடினர், இரண்டாம் உலகப்போரில் அதே படைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். தனது ஒத்துழைப்பு அரசை விச்சி (VICHY) என்ற பிரென்சு நகரில் நிறுவினார். அவருடைய ஒத்துழைப்பு அரசு 'விச்சியரசு' (VICHY GOVERNMENT) என்று அழைக்கப்பட்டது. இன்று எதிரிக்கு ஒத்துழைப்பு வழங்கும் அரசைக் குறிப்பிடும் கலைச் சொல்லாக அது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. விச்சி நகரில் பல வசதியான விடுதிகள் இருப்பதால் அந்த நகரம் அரசபீடமாகத் தெரிவு செய்யப்பட்டது. அல்ஜீரியா கொட்டேல் (ALGERIA HOTEL) என்ற உல்லாசவிடுதி அரசின் முக்கிய கருமபீடமாகத் தெரிவு செய்யப்பட்டது. இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் ஒத்துழைப்பு வழங்கிய அமைப்பினர் யாழ்.நகரின் கொட்டேல் அசோகா (HOTEL ASOKA) என்ற விடுதியைத் தமது அலுவலகமாகத் தெரிவுசெய்தனர். அதேபோல் இன்று சிங்கள இராணுவத்திற்கும் சிங்கள அரசிற்கும் ஒத்துழைப்பு வழங்கும் அமைப்பினர் சிறிதர் திரையரங்கத்தை (SRIDHAR THEATRE) தமது முக்கிய அலுவலகமாகவும் பாதுகாப்பு அரணாகவும் அமைத்துள்ளனர். பழையது புதிய வடிவத்தில் வரும்போது வரலாறு என்கின்றோம். படிப்படியாக எதிர்ப்பியக்கத்தினர் பிரான்சில் தாக்குதலைத் தொடங்கினர். ஜேர்மன் படைகளின் கொடுஞ் செயல்களுக்கு அஞ்சிய பிரெஞ்சு மக்கள் முதலில் அப்பாவிகள் போல் இருந்தனர். பின்பு எதிர்ப்பணியில் இருப்பவர்கள் 'எம்மவர்' என்ற உணர்வு ஏற்பட்டது. அதன் பின் உணவு வழங்குதல், மறைவிடம் கொடுத்தல், தாக்குதலுக்கு உதவுதல் போன்ற நடவடிக்கைகள் தொடங்கின. யூன் 06.1944ஆம் நாள் நேச நாட்டுப் படைகள் வட பிரான்சில் நுழைந்தன. எதிர்ப்பணியினரும் மக்களும் நேசநாட்டுப் படைகளோடு இணைந்தன. விச்சி அரசின் காலம் அத்தோடு முடிவுற்றது. தேசத்துரோகி என்று தீர்ப்பு வழங்கப்பட்ட மார்சல் பேத்தேயினின் தூக்குத் தண்டனை நாட்டுத் தலைவர் டி கோலின் தலையீட்டில் ஆயுட் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவர் சிறையில் இறந்தார் (1951).



விடுதலைக்காக மக்கள் கொடுக்கும் அதியுயர் விலையான உயிரிழப்பு எதிரிப் படைகள் வழங்கும் கூட்டுத்தண்டனை மூலம் ஏற்படுகின்றது. எதிரிப்படை அதிகாரியோ பதவி குறைந்த இன்னொருவனோ கொல்லப்படும் போது கொன்றவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்களை கசட்டு மேனிக்கு கொன்றழித்தல் கூட்டுத் தண்டனை (COLLECTIVE PUNISHMENT) எனப்படுகின்றது. இது மிகப் பிரபலமான இராணுவ உபாயம், வஞ்சம் தீர்ப்பதோடு மிரட்டிப் பணியவைக்கும் உபாயமாகவும் இவ்வகைத் தண்டனை பயன்படுகின்றது. போரியல் வரலாற்றில் மிகப் பழைமை வாய்ந்த நடைமுறையென்று இது வர்ணிக்கப்படுகின்றது. பிரான்சில் ஜேர்மன் நாசி ஆட்சி நிலவிய போது தூள் (TULLE) நகரில் ஜேர்மன் ➥

இராணுவ அதிகாரி எதிர்பியக்கத்தினரால் கொல்லப்பட்டார். இதற்குப் பதிலடியாக யூன் 09.1944ஆம் நாள் வயதிளமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 99 தூள் நகர இளைஞர் களை ஒரு மரத்தில் தொங்கவிட்டு படையினர் கொன்றனர். இக்காட்சியைப் பார்க்கும்படி துவக்கு முனையில் மக்கள் நிர்ப்பந்திக்கப் பட்டனர். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் தொங்கிய மரத்தின் கீழ் அமர்ந்து ஜேர்மன் படையினர் விருந்துண்வு உட்கொண்டனர். மக்கள் நெருக்கமாக வாழும் கிராமங்கள் மீது நடக்கும் குண்டுவீச்சு கண்மூடித்தனமான ஆட்டிலறித் தாக்குதல்கள் என்பன கூட்டுத் தண்டனையின் பிற வடிவங்களாகும். மூதூர், அல்லைப்பிட்டி, வங்காலை, பேசாலை போன்ற பகுதிகளில் நடந்த தமிழினப் படுகொலைகள் இவ்வகைத் தண்டனையில் அடங்கும். அமெ ரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாட்டுப் படையினர் சிங்கள இராணுவத்தினருக்கு வழங்கிய கிளர்ச்சியை அடக்கும் பயிற்சியில் (ANTI - INSURGENCY TRAINING) பாலியல் வல்லுறவும் அதற்குப்பின் படுகொலையும் முதலிடம் பெறுகின்றன. இது மீன் குஞ்சிற்கு நீச்சற்பயிற்சி போன்றது.

"மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது" என்று எமது தேசியத் தலைவர் அவர்கள் கூறியுள் ளார். விடுதலை உணர்வானது மனிதத்தின் ஆழமான அபிலாசையிலான படியால் அதை அழிக்கும் உபாயம் இன்று கண்டுபிடிக்கப்பட வில்லை. விடுதலைப்போர் காரணமாக நாம் மீண்டும் வீரம் செறிந்த இனமாக புத்துயிர் பெற்றுள்ளோம். நாம் தூக்கும் ஆயுதத்தின் தன்மையையும் நடத்தும் போர்முறையையும் எதிரி தீர்மானிக்கிறான் என்று சொல்வார்கள். எதிரிக்கு அடிகொடுக்க வேண்டிய கட்டாய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். இன்று தமிழீழ மக்கள் பெரும் எண்ணிக்கையில் பாதுகாப்புப் பயிற்சியில் ஈடுபடுகின்றனர். இரண் டாம் உலகப் போரின்போது இங்கிலாந்தின் கிறிஸ்தவ மதகுருமார்கள் கூடப் போரிடத் தயாராக ஆயுதப்பயிற்சி எடுத்தனர். மக்கள் சக்தியின் வலுவை உணர்த்தும் விதத்தில் அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் சேர்ச்சில் பின்வருமாறு கூறினார்: "நான் சிங்கமல்ல, சிங்கம் போன்று கர்ச்சிக்க வைக்கப்பட்டுள் ளேன்."

தெற்கு ஆசியாவின் இரு முக்கிய விடுதலைப் போர்கள் எமது கவனத்தினை ஈர்க்கின்றன. முதலாவது இந்திய விடுதலைப் போர். இதில் இந்திய மக்கள் அனைவரும் முழு அளவு ஈடுபாடு காட்டினர். சாத்வீக முறைப்படி நடத்தப்பட்டதாகக் கூறப்பட்டாலும் வன்முறைச் சம்பவங்கள் நிறைய நடந்தன. பிரிட்டிஷ் அடக்குமுறைக்கு எதிரான வன் முறைகளை பொதுமக்கள், குறிப்பாக பகவத் சிங் போன்ற துடிப்பான இளைஞர்கள் நடத்தி னர். இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திர இயக்கத்தை வழிநடத்தியது. காலத்திற்குக் காலம் காங்கிரஸ் தலைவர்கள் தெரிவுசெய்யப் பட்டாலும் ஒரு பதவியும் காங்கிரசில் வகிக்காத மகாத்மா காந்தியே அதன் உண்மையான தலைவராக இருந்தார். காங்கிரஸ் கொள்கை களை அவர் உருவாக்கினார், நடமுறைப் படுத்தினார். பிரிட்டிஷ் அரசிற்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களும் நிறைய இருந்தனர். நிராத்சி சவுத்திரி என்ற கல்விமான் பிரிட்டிஷ் ஆட்சி முடிவிற்கு வந்து அவர்கள் வெளியேறியபோது தானும் கூடச்சென்று இங்கிலாந்தில் குடி யேறினார். சுதந்திரம் ஒரு மாயை, அதில் நேரு குடும்ப ஆட்சிக்கு வழிவிட்டுள்ளது என்று தனது நூலில் சவுத்திரி தெரிவிக்கின்றார். (THREE HORSEMEN OF THE NEW APOCALYPSE NIRAD C.CHAUDHURI. OXFORD UNIVERITY PRESS) அதே சமயத்தில் காங்கிரஸ் கட்சியும் தனது ஏக போகத்தை வெளிக்காட்டத் தவறவில்லை. நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய சர்வபள்ளி கோபால் "தானே நாடு என்று நினைத்து செயற்படும் காங்கிரஸ்" என்றுள் ளார். (JAWAHARLAL NEHRU: S.GOPAL PAGE-60)

வியட்நாம் போர் முற்றிலும் ஆயுதப் போராக இடம்பெற்றது. 3 ஆக்கிரமிப்பு நாடு களுக்கு எதிராக வியட்நாம் மக்கள் போரிட நேர்ந்தது. நெடுங்காலம் பிரெஞ்சுக் காலனியாக இருந்த வியட்நாம் இரண்டாம் உலகப்போர் காலத்தில் யப்பான் வசமானது. 1833ஆம் ஆண்டு தொடக்கம் வியட்நாம், லாவோஸ், கம்போடியா ஆகியவற்றை கூட்டாக பிரெஞ்சு இந்தோ சீனா (FRENCH INDO CHINA) என்ற பெயரில் ஆட்சி செய்த பிரான்சு 1940ல் யப்பான் படைகளால் வெளியேற்றப்பட்டது. யப்பானுக்கு எதிரான தேசிய போரை வியட்மின் (viet minh) இயக்கத் தலைவரான கோசிம்மின் (Hochiminh) நடத்தினார். 1945 யப்பானியப் படைகள் வெளியேற்றப்பட்ட பின் பிரெஞ்சுக் காரர்கள் மீண்டும் வந்துவிட்டார்கள். பிரெஞ்சுப் படைகளுக்கு எதிரான போர் 1954வரை நடைபெற்றது. பிரெஞ்சுப் படைகளின் கோட்டை தியன் பியன் பூ 1954 வியட்நாம் படைகளிடம் வீழ்ச்சிகண்டபின் பிரெஞ்சு ஆட்சி முடிவிற்கு வந்தது. ஆனால் அவர்களுடைய இடத்திற்கு போரை முன்னெடுக்கும் நோக்கில் அமெரிக்கப் படைகள் முன்வந்தன. வியட் நாமியர்கள் இப்போது அமெரிக்கப்படைகளோடு மோதவேண்டிய நிலை தோன்றியது.

அரை மில்லியனுக்கு மேலான அமெரிக்கப்படையினர் வியட்நாமில் குவிக்கப் பட்டனர். இதில் 58000 பேர் கொல்லப்பட்டனர். 1.5 இலட்சம் பேர் அங்கவீனராயினர். 2000பேர் காணாமல் போயினர். அமெரிக்கர்கள் நடத்திய தாக்குதலில் 20 இலட்சம் வியட்நாமியப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். 12.5 இலட்சம் வியட் நாம் போராளிகளும் உயிரிழந்தனர். உலக வரைபடத்திலிருந்து வியட்நாமை அகற்றும் வலு அமெரிக்காவிடம் உண்டு என்று அப்போது வீரம் பேசிய பாதுகாப்புச் செயலாளர் றொபாட் மெக் நாமெரா பிற்காலத்தில் தனது நூல் மூலம் வியட்நாமிய மக்களிடம் மன்னிப்புக் கோரினார். (In retrospect. the tragedy and lessons of vietnam: Robert mcnamara) 1975இல் அமெரிக்கா படுதோல்வியுடன் வியட்நாமில் இருந்து வெளியேறியது. அத்தோடு பொதுமக்களின் துன்பம் முடிவிற்கு வரவில்லை. விமானம் மூலம் அமெரிக்கர்கள் கொட்டிய நச்சுப்பொருட்களின் தாக்கத்தை அவர்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவிக்கிறார்கள்.

வியட்நாம் மக்களின் அவலத்தையும் சகிப்புத் தன்மையையும் விளக்கும் வரலாற்றுக் குறிப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டிலிருந்த தென் வியட்நாமுக்கும் வியட்நாம் படைகளின் கட்டுப் பாட்டிலிருந்த வட வியட்நாமிற்கும் இடையில் 05கிலோ மீற்றர் அகலமான சூனியப்பிரதேசம் இருந்தது. அதன் நடுவே வியன்காய் நதியோடி யது. சூனியப் பிரதேசத்தின் வடபால் வாழ்ந்த மக்கள் தமது வாழ்விடங்களை நிலத்தடியில் அமைத்துக்கொண்டனர். அவை பதுங்கு குழிகள் அல்ல. வாழ்விடங்கள். பல வருடங் களாக மக்கள் நிலத்தடியில் வாழ்ந்தனர். நிலத்தடியில் இருப்பிடங்கள், சுரங்கப்பாதைகள் என்பனவவோடு மருத்துவ வசதிகளும் இருந் தன. மகப்பேற்று அறை சராசரி சவப்பெட்டியின் பருமனில் இருந்தது. இப்பகுதி மீது அமெரிக்க விமானங்கள் இடைவிடாது குண்டுமழை பொழிந்தன. குண்டுவீச்சு ஓயும்போது மக்கள் வெளியே வந்து நாளாந்த கடமைகளைச் செய் வார்கள். மீண்டும் நிலத்தடி இருப்பிடங்களுக்குச் செல்வார்கள்.

தாங் துயி திராம என்ற பெயர் கொண்ட வியட்நாமியப் பெண் மருத்துவப் போராளியின் நாட்குறிப்பு நூல் வடிவம் பெற் றுள்ளது. இவை வியட்நாமிய மற்றும் ஆங் கில மொழிவடிவங்களில் 2005ஆம் ஆண்டில் வெளிவந்தன. 1967 - 1970 வரை இவர் களமுனையில் செயற்பட்டார். தனது 27ஆம் வயதில் அமெரிக்கர்களின் தாக்குதல்களின் போது யூன் 1970 இல் சாவடைந்தார். இவருடைய நாட்குறிப்புப் புத்தகங்களை ஒரு அமெரிக்கப் படையாள் கைப்பற்றி அமெரிக்கா கொண்டுசென்றான். இறந்தவர் குடும்பத்தினரின் அனுமதியோடு இப்போது எப்.பி.ஐ. அதிகாரி யாகப் பணியாற்றும் அந்த அமெரிக்கர் நாட் குறிப்பு நூலை வெளியிட்டுள்ளார்.(The diary of dang thvy tram)என்பது இந்நூலின் பெயராகும்.

அமெரிக்கா படுதோல்வியைச் சந்தித்த வியட்நாமில் வெற்றிக்கான வெறி யோடு தாக்குதல் நடத்தப்பட்டது. 02ஆம் உலகப்போரில் போட்ட குண்டுகளின் மொத்த எடையிலும் கூடிய எடையிலான குண்டுகள் வியட்நாம் மீது போடப்பட்டன. மரபுசாராப் போர் முறைகளையும் அமெரிக்கர்கள் வியட்நாமில் நடைமுறைப்படுத்தினர். கிறின் பெரே (Green beret) படையணியை 1962ஆம் ஆண்டு சனாதிபதி கெனடி உருவாக்கினார். ஆழ ஊடுருவி எதிரி நிலைகள், பொதுமக்கள் வாழ் விடங்கள் மீது தாக்குதல் நடாத்தும் உத்தியை அமெரிக்கர்கள் வியட்நாம் போரில் அறிமுகம் செய்தார்கள். இப்போது அம்முறையை அவர்கள் LRRP அல்லது Long Range Reconnaissance Patrol என்று சங்கேத மொழியில் லேர்ப்ஸ் (Lurps) என்றும் அழைத்தார்கள். வியட்நாமில் அது படுதோல்வி அடைந்தது. பல பொதுமக்களைக் கொன்றதுதான் மிச்சம்.

லேர்ப்ஸ் போன்ற முறையை கிறின் பேரே படையணியினர் சிங்கள இராணுவத் தினருக்குக் கற்றுக் கொடுத்தனர். ஆரம்பத்தில் அது நல்ல வெற்றியை அளித்தது. விடுதலைப் புலிகள் ஒரு பெறுமதி வாய்ந்த கேணல் தர அதிகாரியையும் பல லெப்.கேணல் தர உறுப் பினர்களையும் தொடர்ச்சியாக இழந்தனர். இந்த ஊடுருவல்கள் தமிழீழத்தின் பொதுமக்கள் மத்தியில் பெரும் விழிப்பை ஏற்படுத்தியது. எல்லைப்பாதுகாப்பின் அவசியத்தை உணர்த் தியது. தந்தவனுக்கே திருப்பிக்கொடு என்னும் கோட்பாட்டிற்கு அமைவாக ஊடுருவல் களுக்குப் பொறுப்பானவர்களை புலிகள் காவு கொள்ளத் தொடங்கினர். ஊடுருவ முயன்ற போது பொதுமக்களால் சுட்டுக்கொல்லப்பட்ட ராஜபக்ச என்ற படையாள் புலிகளின் சீரு டையை அணிந்திருந்தான். போரியல் சம்பந்த மான சர்வதேச விதிமுறைகளுக்கு இது முர ணானது. சர்வதேச சமூகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இவ் விதிமுறைகள் ஜெனிவா கொன்வென்சன் என்று குறிப்பிடப்படுகின்றன.

பெரும் எண்ணிக்கையில் கொன் றொழிக்கும் போது எஞ்சியோர் விடுதலைப்புலி களை வெறுத்தொதுக்குவார்கள் என்ற பாடத்தை இஸ்ரேயிலின் மொசாட் உள வமைப்பு சிங்கள இராணுவத்திற்குச் சொல்லிக் கொடுத்தது. இதன் அடிப்படையில் முப்படை யினரும் கூட்டாக தமிழரை வகைதொகையாக படுகொலை செய்தனர். எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. விடுதலைப்புலிகளுக்கும் பொதுமக்களிற்கும் இடையிலான பாசப் பிணைப்பை ஒருவராலும் சிதைக்க முடியாது. ஏனென்றால் மக்கள்தான் புலிகள், புலிகள்தான் மக்கள். வியட்நாமிய ஜெனரல் கியாப் அமெரிக்க இராணுவ ஆய்வாளர் ஸ்ரான்லி கார்னோவிற்கு 1990இல் கூறியதாவது. நாங்கள் ஒரு மக்கள் போரை (Peolple War) நடத் தினோம். அமெரிக்காவின் வலுவான இராணுவ உபகரணங்கள் எம்மை வெல்ல முடியவில்லை இறுதி வெற்றி மக்கள் படைக்குத்தான்.

கூட்டுத்தண்டனை -



அல்லைப்பிட்டி படுகொலை

**"மக்கள் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மையிது" என்று எமது தேசியத் தலைவர் அவர்கள் கூறியுள்ளார். விடுதலை உணர்வானது மனிதத்தின் ஆழமான அபிலாசையிலான படியால் அதை அழிக்கும் உபாயம் இன்று கண்டு பிடிக்கப்படவில்லை. விடுதலைப்போர் காரணமாக நாம் மீண்டும் வீரம் செறிந்த இனமாக புத்துயிர் பெற்றுள்ளோம்.**

# மொட்டவிழ்ந்த கனவுகள்



நாலடி நடந்தாலே நகங்களுக்குச் சாயம் பூசும் வளமுள்ள செந்நிற மண்பூமி. விமான ஓடுதளம் மட்டுமன்றி பலாலிப்பகுதி முழுதுமே சிறிலங்காப் படையினரின் பிடியில் சிக்கிவிட்டிருந்தது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலாலிப் படைத்தளத்தின் பெரும்பகுதியை



**கடற்கரும்புலி மேஜர் தமிழ்மங்கை/நைற்றிங்கேள் (சத்தியவாணி துரைராசா) பூநகரி, மன்னார்.**
***22.02.1998 பருத்தித்துறைக் கடற்பகுதியில் பபதா தரையிறங்கு கலம் மீதான தாக்குதல்.***

விடுதலைப்புலிகள் மகளிர் படையணி காவல் செய்தது.

இந்திய இராணுவத்திடம் போர்ப்பயிற்சியை மூன்றாண்டுகள் பயின்றிருந்த, படையணியின் மூத்த உறுப்பினர்களும் அப்போதுதான் பயிற்சி முடித்து வந்த புதியவர்களுமாக துடிப்புமிக்க இளையவர்களால் எமது காவல் அரண்கள் எப்போதுமே விழிப்பாக இருந்தன.

கனரக ஆயுதங்களின் பலம் இல்லாத காலம் அது. எழுபத்தைந்து பேர் கொண்ட அணி காவல் செய்யும் பகுதியில் ஒரேயொரு பிறண் எல்.எம்.ஜியும் ஒரு ஆர்.பி.ஜியும் நின்ற காலம். எமது படைவலு இலகுரக ஆயுதக்காரர்களது சூட்டு வலுவிலும், மனோவலுவிலும் பேணப்பட்டது. கையில் குண்டுகளுடனோ, சுடுகலன்களுடனோ ஒருவர், இருவராக முன்னேபோய் பகைக் காப்பரண்களை நெருங்கித் திடீர் தாக்குதல் செய்து எதிரியை நிலைகுலைய வைப்பதுதான் அப்போது எமது முக்கிய வேலை. நைற்றிங்கேள் இதில் மிகவும் தேர்ந்தவர்.

எதிரி ஏவும் இரு ரவைகளுக்கு இடையேயுள்ள இடைவெளியைப் பயன்படுத்தி முன்னேறவும் பின்னகரவும் அவரால் முடியும் என்றுகூற எங்களில் பலரால் அவரது செயல்கள் சொல்லப்படுவதுண்டு. பலாலியின் செழித்த வாழைமரங்களில் ஒன்றுமட்டும் போதும் எதிரியின் கண்ணில் படாமல் இவருக்குக் காப்பளிக்க. அவ்வளவு மெல்லிய உடல்வாகு. தோற்றத்துக்குச் சற்றும் பொருந்தாத கடும் துணிச்சல். சிறிதும் குறிவழுவாத சூடு.

1990ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மாங்குளத்தில் அமைந்திருந்த சிறிலங்காப் படைத்தளத்தை அழிப்பதற்கான பயிற்சிக்கு திறமையாளர் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பட்டியலில் நைற்றிங்கேள் என்ற பெயர் முன்னணியில் இருந்தது. அப்போது அவர் ஏழுபேர் கொண்ட அணியின் பொறுப்பாளர். இவரின் மேலான பொறுப்பாளர் பலாலியிலிருந்து நைற்றிங்கேளைப் போகவிடமாட்டேன் என்று சிறப்புத் தளபதியிடம் ஒற்றைக்காலில் நின்றார்.

சண்டையொன்றில் தான் விழுந்தால், வெற்றிடத்தை நிரப்ப நைற்றிங்கேள் வேண்டும் என்ற அவரின் பிடிவாதமே கடைசியில் வென்றது.

என்னுடைய அணியில் நைற்றிங்கேள் இருக்கவேண்டும் என்ற விருப்பம் இவர் ஒருவரிடம் மட்டுமல்ல, அணித்தலைவிகள் பலரிடமும் இருந்தது. மிகச் சிறந்த சூட்டாளர் என்பதால் இவருக்கு ஆர்.பி.ஜி வழங்கப்பட்டது. ஏவப்படுகின்ற எறிகணைகள் ஒவ்வொன்றும் இலக்கை சரியாகத் தாக்கவேண்டும். "தவறிவிட்டது" என்ற சொல்லுக்கு அகராதியில் இடமில்லை. எனவே ஆர்.பி.ஜியும் நைற்றிங்கேளும் தோள் சேர்ந்தனர்.

விடுதலைப்புலிகளின் வரலாற்றுப் புகழ்மிக்க, ஆகாய கடல் வெளிச்சமர் பரந்த வெளியில் விரிந்தபோது கடலால் தரையிறக்கப் பட்டு இரைந்துவந்த ராங்கிகளிடமிருந்து எமது ஆளணியைப் பாதுகாக்க ஆர்.பி.ஜியின் பலம் தேவைப்பட்டது. எந்த அணியிலும் இல்லாது நைற்றிங்கேள் தனியாக இயங்கவிடப்பட்டிருந்தார்.

"நைற்றிங்கேளை அனுப்பு"

என்ற கட்டளை களத்தின் ஒரு முனையிலிருந்தும், கேணல் பால்ராஜிடமிருந்தும் வரும். மறு முனையிலிருந்து யாழினியிடமிருந்தும் (விதுஷா) வரும். எங்கு ராங்க் இரைந்ததோ, அங்கு அவர் தேவைப்பட்டார். எத்திசையில் அவர் போனாரோ, அங்கு அதன்பின் ராங்கின். இரைச்சல் கேட்காது.

களத்தின் தேவைக்கேற்ப கடுகதியாக விரையும் நைற்றிங்கேள், துளியும் தற்பெருமை இல்லாத, எப்போதும் எவரையும் கனம் பண்ணுகின்ற தன் இயல்பில் கடைசிவரை வழுவவில்லை.

1993ஆம் ஆண்டில் பூநகரியிலிருந்த சிறிலங்காப் படைத்தளத்தைத் தாக்குவதற்கு நாம் தயாராகிக் கொண்டிருந்தோம். நடவடிக்கையில் இறங்கப்போகும் ஆர்.பி.ஜிக்களின் பொறுப்பாளர் நைற்றிங்கேள்.

பூநகரிப் படைத்தள இராணுவம் அதற்கிடையில் முன்னகரப் போவதற்கான அறிகுறிகள் தென்பட, மறிப்பதற்கு பூங்கா தலைமையில் பெண் போராளிகளின் அணியொன்று போனது. மறிப்பு வேலியாகக் காப்பரண்களை அமைத்தது. ஆர்.பி.ஜிக்களுக்கான நிலைகள் மிக நேர்த்தியாக நைற்றிங்கேளின் வழிநடத்தலில் அமைக்கப்பட்டு, பார்வையை ஈர்த்தன.

நிலைகளைப் பார்வையிட வந்தார் கேணல் சொர்ணம். அவரின் கவனத்தையும் அந்நிலைகள் ஈர்த்தன.

"ஆர் உங்கட ஆர்.பி.ஜி பொறுப்பாளர்?"

கேணல் சொர்ணத்தின் முன், காற்றிலாடும் கழுகுபோல வந்து நின்ற நைற்றிங்கேளைப் பார்க்க அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"எத்தினை ஷெல் அடிச்சிருக்கிறீங்கள்?"

"இருபத்திமூண்டு"

அதிர்ச்சி தரும் பதில்.

"எங்கெங்கே அடிச்சீங்கள்?"

"ஆனையிறவில பதினெட்டு. அதுக்குப் பிறகு வேற வேற சண்டையளில அஞ்சு"

நைற்றிங்கேளைக் கூர்ந்து பார்த்தவர்,

"நீங்கள்தான் அந்த நைற்றிங்கேளோ!" என்றார்.

இதுபோதும். இதற்குமேல் நைற்றிங்கேளைப் பற்றி நாம் வேறெதுவும் பேசத்தேவையில்லை.

போன சண்டைகள் எதிலுமே அவர் காயப்பட்டதில்லை. தனது இலக்கைத் தாக்கிவிட்டு, சிறு கீறல்கூட இல்லாமல் திரும்பிவந்த ஒவ்வொரு முறையும்,

"ஏதோ ஒரு சண்டையில் நான் முழுசாப் போறதுக்குத்தான் இப்பிடிக் காயங்களேயில்லாமல் வாறன்" என்றவர் பூநகரி சிங்களக் கூட்டுப்படைத்தளம் மீதான "தவளை" நடவடிக்கையில் காலில்லாமல் வந்தபோது, சற்று நிம்மதியடைந்தோம் ஆள் போவதைவிடக் கால்போனது பரவாயில்லையென்று.

ஒற்றைக் காலோடு தன் வாழ்வின் அடுத்த கட்டம் இதுதான் என்பதை அவர் முடிவெடுத்தபோது நாம் கவலையடையவில்லை. கடலிலும் அவரின் வேகம் தணியவில்லை எனப் பெருமைப்பட்டோம்.

***

சிறுத்தைகளைப் போன்று பதுங்கிப்பாயும் அணியொன்றின் நிர்வாக வேலையில் சிலகாலம் பங்கேற்ற பின் விடுதலைப்புலிகள் மகளிர் படையணிக்கு வந்திருந்தார் நித்தியா.

எப்போதும் சிரித்த முகம். மனம் சிரிப்பது விழிகளில் வெளிப்படையாகத் தெரியும்படியான சிரிப்பு. சளைக்காமல், களைக்காமல் எத்தனை கடின பயிற்சியையும் செய்தார். விடுதலைப் புலிகள் மகளிர் படையணிக்கு வந்த நாளிலிருந்து தொடர்ந்து சண்டைதான். தொடர்ந்து காயங்கள்தான்.

பயிற்சி செய்வார். களம் செல்வார். காயத்தோடு வந்து ஓய்வெடுப்பார். மறுபடி பயிற்சி, சண்டை, காயம், ......., ......., என்று ஒரு தொடர் சங்கிலி.

அமைதியான இயல்பைக்கொண்ட அவர் கண்டிப்பான அணி முதல்வியாக அல்லாமல், அன்பான அணி முதல்வியாகவே தனது முதற்களமான 1992ஆம் ஆண்டில் தொண்டைமானாற்றிலிருந்து



**கடற்கரும்புலி மேஜர் நித்தியா (செல்வராசா தயாளினி )யாழ்ப்பாணம்**
***16.09.2001 பருத்தித்துறைக் கடற்பரப்பில் கப்பல் தொடரணி மீதான கரும்புலித் தாக்குதல்.***

ஒட்டகப்புலம் வரையான நூற்றைம்பது காப்பரண்கள் மீதான தாக்குதலில் தொடங்கி, 1997இல் ஜெயசிக்குறு எதிர்நடவடிக்கை வரை எம்மோடிருந்தார்.

பயிற்சி செய்தால், தூரம் நடந்தால் கால் வீங்கும் என்று தெரிந்துகொண்டே சளைக்காமல் எல்லாவற்றிலும் ஈடுபட்ட நித்தியாவினுள் கரும்புலிக் கனவு மொட்டவிழ்ந்து வாசம் வீசியபோது, எங்களுக்குத் தெரிந்துவிட,

"என்ன நித்தியா, கரும்புலிப் பயிற்சி செய்யிற நிலைமையிலா நீ இருக்கிறாய்"

என்ற நண்பிகளின் அக்கறையான கேள்விக்கும் சிரிப்பையே பதிலாகத் தந்துவிட்டு, அவர் போய்விட்டார்.

– மலைமகள் –

# தமிழீழம் ஒரு தனியரசு

- இராசமைந்தன் -






அண்மையில் அறிவிக்கப்பட்ட ஐரோப்பிய ஒன்றியத் தடையின் பின்னர் தமிழ்மக்களிடையே போருக்கான ஒரு எதிர்பார்ப்பும் தமிழரின் சேனைகளில், அதிலும் குறிப்பாக தமிழீழத் தேசியத் துணைப்படையில் ஆட்சேர்வதும் மிக அதிகமாகியிருக்கிறது. தமது தனிப்பட்ட அல்லது குடும்பக் காரணங்களுக்காக அமைப்பிலிருந்து விலகியிருந்த போராளிகளில்கூட 80வீதமானவர்கள் மீண்டும் இணைந்திருக்கிறார்கள். நான்காண்டுப் பேச்சுவார்த்தைகளையும் அதன் சாதக பாதகங்களையும் உன்னிப்பாகக் கவனித்தபடி மதில்மேல் பூனைபோன்ற மனநிலையில் இருந்த சிலரும் இனிப் போர்தான் என்ற முடிவுக்கு வந்தவர்களாகச் செயற்படுவது தெரிகிறது. தடைகள் பணிவை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புக்களுக்கு நேர்விரோதமான இந்த நிகழ்வுகளையும் நிலவரங்களையும் கவனிக்கும் அவதானி ஒருவருக்கு உலக சமுதாயத்தின் சமிக்ஞைகளைத் தமிழ்த் தரப்பு சரிவரப் புரிந்துகொண்டுதான் இயங்குகிறதா என்ற கேள்வி எழலாம். அக்கேள்வியே ஆய்விற்குரியது.

முதலில் தமிழர்கள் தங்களை யார் என அடையாளப் படுத்துகிறார்கள் என்பது முக்கியமானது. அமெரிக்காவில் வாழும் பூர்வகுடிகளை நாம் எல்லோருமே செவ்விந்தியர்கள் என நூற்றாண்டு காலமாக அழைத்தாலும் அவர்கள் தங்களை இந்தியர்கள் போல் மாற்றிக்கொண்டதில்லை. மாறுவார்கள் என எதிர்பார்க்கவும் முடியாது. இதேபோலவே தமிழர்களும் தாம் சிறிலங்காவைச் சேர்ந்தவர்கள் என அழைக்கப்பட விரும்பவில்லை. சிங்களச் 'சிறி' இற்கு எதிரான குழப்பம் இதற்கு உதாரணம். 1977இல் நிகழ்ந்த பொதுத்தேர்லில் அதே விடயத்தை இன்றைய உலக சனநாயக வழியிலும் அதே மொழியிலும் ஈழத்தமிழர்கள் கூறிவிட்டார்கள். அரசியல் தலைவர்களுக்கிடையேயான ஒப்பந்தங்களை விட இதுவே தார்மீகத் தகுதியை அதிகம் கொண்டிருக்கும் கருத்து வெளிப்பாடு. இந்தக் கருத்துக்கள் பற்றிய பிரக்ஞையற்ற பேச்சுக்களோ உடன்படிக்கைகளோ இங்கே செல்லாது என்ற நிலைக்குத் தமிழ்மக்கள் வந்து வெகுகாலமான பின்னும் ஒற்றையாட்சி பற்றிய கூச்சல் எழும்போது ஒரு கேலிக்கூத்தை இரசிக்கும் மனநிலையையே அது அவர்களுக்கு ஏற்படுத்துகிறது.

இங்குள்ள தமிழர்கள் தாங்கள் தனித்துவமும் இறைமையும் உள்ள குடிகள் என்றே தங்களைக் கருதுகிறார்கள். அந்தப் பின்னணியில் கடந்தமாதம் வெற்றிலைக்கேணிக்கு அப்பால் நிகழ்ந்த கடற்சமரின் பின்னர் சிங்களக் கடற்படைத் தளபதி தங்கள் கடல் இறைமை பற்றிப் பேசியதும் தமிழீழக் கடற்படைத் தளபதி அதற்குப் பதிலிறுத்ததும் கவனிப்பிற்குரியவை. தமிழர் தாயகத்தை அண்டிய கடலின்மீது சிங்களக் கடற்படைக்கு இறைமை எப்போது எங்ஙனம் வந்தது என்று முதலில் பார்க்கவேண்டும்.

இந்தத் தீவை ஐரோப்பியர் கையகப்படுத்தியபோது தமிழர் ஆண்டுவந்த தரையையும் கடலையும் சேர்த்தே கையகப்படுத்தினர். அப்போதுதான் தமிழர்கள் முதன்முதலாக தங்கள் தாயகக் கடலின் இறைமையை இழந்தார்கள். ஐரோப்பியர் இலங்கையை விட்டுச்சென்றபோது தமிழர்களிடமிருந்து பறித்த இறைமையையும் சேர்த்துச் சிங்களவர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றார்கள். சிங்களவர்கள் தமிழர் கடற்பரப்பை இறைமை கொண்டாடியதென்றால் அது வெள்ளையர்கள் விட்டுச்சென்ற நாளிலிருந்து கடற்புலிகள் பகுதிபகுதியாக மீட்டெடுக்க ஆரம்பித்தது வரையான காலப்பகுதியில் மட்டுமே. இது தரைக்கும் பொருந்தும். ஐரோப்பிய வருகையின் முன்னான ஆயிரத்தாண்டுகாலத் தமிழர் இறைமையை இப்போது நடுவம் வகிக்கவந்த நாடுகள் சட்டவிரோதம் என்ற தோரணையில் அணுகுவதைத் தமிழர்கள் இரசிக்கவில்லை. யதார்த்தம் விளங்காத எரிச்சலூட்டும் செயலாகவே அது பார்க்கப்படுகிறது. பன்னாட்டு மத்தியத்தின் மீதான நம்பிக்கையையும் அது வெகுவாகச் சிதைக்கிறது.

அடுத்தது, ஒரு அரசிற்கும் அதன் எதிர்ப்பாளர்களுக்கும் இடையேயான பிணக்கின் மீதான உலக அணுகுமுறை பற்றிய ஈழத்தமிழரின் அனுபவம். ஒரு உரிமைப் போராட்டத்தில் அரசல்லாதோருக்கு பல வசதிகள் மறுக்கப்படுகின்றன. சில வசதிகளை வழங்க முன்வரும் பிற அரசுகள்கூட அதற்கு விலையாக உரிமைக்கான இலட்சியத்தின் சாரத்தை அல்லது ஒரு பகுதியை விட்டுக்கொடுத்தலைக் கேட்கின்றன. அல்லது அரசிற்குச் சாதகமான இழுத்தடிப்பிற்கு ஒத்துப்போகின்றன. அதற்கான காரணங்கள் புரிந்துகொள்ளத்தக்கவை. இன்றைய உலக ஒழுங்கில் அரசு என்பதே உச்ச அதிகாரம் கொண்ட கட்டமைப்பு. அதனுடனான வணிகத் தொடர்புகளே பாதுகாப்பானவை. இவ்வகையில், ஒரு அரசு இன்னுமோர் அரசை, அது எத்தகைய தன்மையைக் கொண்டதாயினும் தன் இனமாகப் பார்க்கிறது. தவிர, தார்மீக நலன்களை விடவும் வணிக மற்றும் பிராந்திய நலன்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மனித உரிமைகள் மற்றும் கொள்கை கோட்பாடுகள் பற்றி எல்லோரும் வாய்கிழியக் கத்தினாலும் இதுவே தவிர்க்கமுடியாத மாறா உலக ஒழுங்கு. இந்தப் பேருண்மையை கால்நூற்றாண்டு விடுதலைப்போராட்ட அனுபவத்தில் தமிழ்மக்கள் பலமுறை முகத்தில் அறைவாங்கிக் கற்றுவைத்திருக்கிறார்கள். அந்த அனுபவத்தின் விளைபொருளாக செயற்படவும் செய்திருக்கிறார்கள். அதன் விளைவே தாமே அரசாதல் எனும் தத்துவம்.

*இங்குள்ள இருபத்தைந்து வயதிற்குட்பட்ட இளையவர்கள் தாம் உலகை அறியத்தொடங்கிய நாட்களில் இருந்து கண்டுவளர்ந்ததும் அரசென்று அறிந்திருப்பதும் தமிழீழ அரசைத்தான். தமக்குப் பாதுகாப்பும் கௌரவமும் கல்வி, தொழிற்றுறை போன்றவற்றில் நேர்த்தியான கண்காணிப்பும் கொண்ட, அந்நியமொழி பேசாத, உறவினர்களும் பங்கேற்கும் ஒரு இலட்சிய அரசில் அவர்கள் தசாப்த காலமாகக் குடிவாழ்கிறார்கள்.*

அரசாதலைத் தவிர வேறெதுவும் எவரும் தங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியாதென்பதே ஈழத்தமிழரின் கால்நூற்றாண்டுகால அனுபவம். அண்மைய ஐரோப்பிய ஒன்றியத் தடையும் அந்தக் கருத்தை வலியுறுத்துவதாகவே உள்ளூரில் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. ஏனென்றால் ஐரோப்பியச் சமூகத்தின் மீதுதான் தமிழர் நம்பிக்கை வைத்திருந்தார்கள். தமிழரின் கடல் நில வான் இறைமை சிங்களவரிடம் போவதற்குக் காரணமாயிருந்தவர்கள் என்ற வகையில் தமிழர் பிரச்சினை தொடர்பான பொறுப்புணர்வு இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் இரண்டு தசாப்தங்களின் மேலாக புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்கள் வாழும் தேசங்கள் என்ற வகையில் அரை நூற்றாண்டுகால ஒடுக்குமுறைக்குள் வாழும் மக்கள்மீது அனுதாபம் இருக்கும் என்ற நினைவும் தகர்ந்து போனதில் மக்களுக்கு ஏமாற்றமே. இலங்கையில் இருந்து வெளியேறியபோது தமிழருக்கான உரிமைப் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தவறிவிட்டோம் என பிரித்தானியத் தூதுவர் சொல்லியிருப்பது ஆறுதலளித்தாலும் அது தீர்வாகாது.

இருந்தாலும், ஏமாற்றங்கள் பழக்கமாகிவிட்ட போராட்ட வாழ்க்கையில் தாங்கள் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதில் ஈழத்தமிழருக்குத் தடுமாற்றம் இருக்கவில்லை என்பதையே இங்குள்ள நிலைமைகள் கோடிகாட்டுகின்றன. 1995இன் பின்னர் வன்னிப் பெருநிலப் பகுதியில் ஒரு ஸ்திரமான அரசு இயங்கிவருவதை யாரும் மறுக்கமுடியாது. அவ்வரசில் பதின்ம ஆண்டுகளுக்குமேற் பழமையான நீதிநிருவாகம், பொருண்மியம், காவற்றுறை போன்றவை திறன்படச் செயற்படுகின்றன.


இந்த அரசு தன் மக்களுக்கெதிரான பாரிய படையெடுப்புக்களை வெற்றிகரமாக முறியடித்திருக்கிறது. மக்களுக்கெதிரான ஆண்டுக்கணக்கான பொருளாதாரத் தடைகளை இலாவகமாகக் கையாண்டு பட்டினிச் சாவு ஏற்படாவண்ணம் ஆட்சி புரிந்திருக்கிறது. பெற்றோரை இழந்த குழந்தைகள், மூதாளர், மனவலிமை குறைந்தோர் போன்றோருக்கான இல்லங்கள் உட்பட்ட சமூகக் கரிசனையோடமைந்த ஊழலற்ற நிருவாக அமைப்புமுறை இங்கே உண்டு. சுனாமியின்போதான அனர்த்த நிவர்த்தி நகர்வுகளில் ஐம்பது வயதைத் தாண்டிய அண்டைய அரசைவிடத் திறமையையும் துரிதத்தையும் நேர்த்தியையும் காட்டியிருக்கிறது தமிழீழ அரசு. தனது மக்களுக்காக உயிர்தந்து போராடும் முப்படைகளையும் சிறப்புப் படைப்பிரிவுகளையும் கொண்டிருக்கிறது. அவ்வீரர்களால் காக்கப்படுவதும் பன்னாட்டு நடுவர்களால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஆட்சி எல்லைகளையும் இவ்வரசு கொண்டிருக்கிறது.

இங்குள்ள இருபத்தைந்து வயதிற்குட்பட்ட இளையவர்கள் தாம் உலகை அறியத்தொடங்கிய நாட்களில் இருந்து கண்டு வளர்ந்ததும் அரசென்று அறிந்திருப்பதும் தமிழீழ அரசைத்தான். தமக்குப் பாதுகாப்பும் கௌரவமும் கல்வி தொழிற்துறை போன்றவற்றில் நேர்த்தியான கண்காணிப்பும் கொண்ட, அந்நிய மொழி பேசாத, உறவினர்களும் பங்கேற்கும் ஒரு இலட்சிய அரசில் அவர்கள் தசாப்த காலமாகக் குடிவாழ்கிறார்கள்.

இந்த எதார்த்த நிலையை உலகக் கவனத்திலிருந்து திசைதிருப்பும் நோக்கில் மகிந்த தன் முன்னோர்களைப்போலவே அரசியலமைப்பு எனும் சாக்கடைக்குள் சத்துள்ள தீர்வுமிட்டாய் தேடுகிறேன் பேர்வழி என்று அரசியல் பம்மாத்துக் காட்டுகிறார். அந்த நாடகத்தை உலகம் கண்டிக்கவில்லை. தமிழர்மீதான சிறிலங்காவின் படுகொலைகளை நிறுத்தமுடியாமலும் பாதுகாப்பு வலயத்தால் அகதிமுகாம்களில் வாழுவோரை மீளவும் குடியமர்த்தவும் முடியாமலும் இருக்கும் பன்னாட்டுச் சமுதாயம், இத்தீவில் தமிழர் பாதுகாப்பாகவும் கௌரவமாகவும் மூச்சுவிடக்கூடிய ஒரே இடமான தமிழீழ நடைமுறை அரசை ஆரம்பநிலைக் கெரில்லா அமைப்புக்களுடன் ஒப்பிட்டு அரசல்லாதோர், பயங்கரவாதிகள், தடைகள் போன்ற அந்நியப்படுத்தும் சொற்களுக்குள் கொண்டுவர முயற்சிப்பது உலக நடுவம் மீதான நம்பிக்கையைச் சிதைக்கின்றதேயன்றி தமிழீழ அரசுமீதான நம்பிக்கையையும் அதைப் பலமாக்கவேண்டும் என்ற எண்ணத்தையும் வலுப்படுத்தவே செய்திருக்கிறது என்ற தகவலையே தமிழீழப் படைகளில் அதிகமாகச் சேருவதன்மூலம் தமிழ்மக்கள் இடித்துரைக்கிறார்கள்.

சிங்களவர்களிடம் பேசுவதற்கு எதுவும் இல்லாத நிலையில் உலக சமூகத்திடம் அவர்கள் கேட்பது இதையே: எங்கள் பாரம்பரிய உரிமையை அங்கீகரியுங்கள். அல்லது நாங்களாக அமைத்திருக்கும் அரசையாவது ஏற்றுக்கொள்ளுங்கள். குறைந்தது ஐம்பதாண்டுகால சிறிலங்கா அரசின் அராஜகங்களை நியாயப்படுத்தாமலாவது இருங்கள். ●

# பலத்தின் பக்கமே உலகம் தீர்ப்பெழுதுகிறது



வியாசன்

இங்கும் வந்திறங்கிவிட்டனர்
விடுதலையை விற்றுவாங்கும் வேடதாரிகள்.
ஆழவேரோடிய எங்களின் நீளமறியாது
பொய்யான சோடிப்புகளுடன்
குதித்துள்ளனர் எமது கொல்லைக்குள்ளும்.
விடுதலைப்பூ எங்கெங்கு இதழ்விரிக்குமோ
அங்கெல்லாம் இறங்கி
வாசம் நுகர்வதாய் வளைத்து மடக்கி
பூக்களைக் கிள்ளியெறிந்து போவதில்
அவர்கள் கில்லாடிகள்.
வந்திறங்கும்போது இருக்கும் பவ்வியமும்,
வாரித்தருவோமெனும் பாவனையும்,
முகத்தில் ஒட்டியிருக்கும் முறுவலும்,
உங்களுக்காகவே வந்தோமெனும் கரிசனையும்
சிலிர்க்கச் செய்யும் முதலில்
சிக்குப்பட வைத்துவிடும் இறுதியில்.
விடுதலை அவாவுறும் எந்த வெளிச்சத்தையும்
இருண்டவானம் ஏற்றுக்கொள்வதில்லை.
நிமிர்ந்தெழும் எந்த மக்களையும்
அடக்குமுறையாளர் அங்கீகரிப்பதில்லை.
தாங்கள் விரும்பும்,
தங்களை விரும்பும்
பொம்மைகளையே அவர்களுக்குப் பிடிக்கிறது.
அதுவும் பேசும் பொம்மைகளெனில்
அவற்றின்மீதே அவர்களுக்குப் பிரியமதிகம்.
இங்கும் இரண்டு பொம்மைகள் இருக்கின்றன
ஒன்று ரணிலெனும் பொம்மை
மற்றது மகிந்தவெனும் பாவைப்பிள்ளை.
இந்தப் பொம்மைகள் சிரிக்கும்,
சாவிகொடுத்தாற் சாப்பிடும்
இயக்குபவரின் விருப்பத்திற்கிசைவாய்
இவை தொழிற்படும்.
பிரபாகரனையும் பொம்மைகளில் ஒன்றாக்க
பலத்த பிரயத்தனமெடுத்தனர் பலர்.
காராம்பசுவையும்,
கற்பகவிருட்சத்தையும் காலடி வைத்தனர்.
அலங்கார நாற்காலிகளாலும்,
வெள்ளிச் சரிகைபின்னிய விரிப்புகளாலும்
விழுங்கிச் செரிக்கலாமென நம்பினர்.
நம்பிக்கையில் இடிவிழுந்ததும்
தோற்றோமெனும் வெப்பிசாரத்திற்தான்
தடைகள்மூலம் சாதிக்கமுயல்கின்றனர்.
வாசலெங்கும் தடைபரவி முள்ளேற்றுகின்றனர்.
வலிக்கும்போதாயினும் வருவர்தானேயென
முள்ளுமிதியடிகளை அணியத்தருகின்றனர்.
வார்த்தைச் சாட்டை எடுத்து
முதுகை வகிர்ந்தெடுக்கின்றனர்.
இப்போ உலகமே ஒன்றாகி நின்று
பொதுமைச் சொல்லொன்றில் பேசுகிறது
அது சமாதானம்.
சமாதானமென்பது மிக அழகான சொல்
வெகு இயல்பானதும்கூட.
உரித்து உரித்து உள்ளே போனால்
இறுதியில் ஒன்றுமில்லாத வெங்காயமே அது.
அந்தச் சொல்லுக்குள் உண்மைவடிவை மறைத்து
ஒளிந்திருக்கமுடியும்.
விடுதலைப் பொறிகளைத் தணிக்கவும்,
அடக்குமுறை வேர்களை வளர்க்கவும்
அந்த ஒற்றைச்சொல்லே அதிகம் வசதியானது.
போரில்லா உலகென்ற போர்வைக்குள்ளேதான்
கணிசமான களவாணிகள் கண்துயில்கின்றனர்.
பரீட்சித்த இடமெல்லாம் வென்றவர்
இங்கேதான் தோற்றுப்போயினர்.
அந்தக்கோபமே
தடையென்ற வடிகாலில் வழிகிறது.
இருண்ட கண்டத்திற் கொலம்பஸ் இறங்கியது
அந்தச் சமாதானமென்ற வார்த்தையுடன்தான்
என்ன நடந்தது பின்னர்?
பூனைக்கண்ணன் இலங்கை புகுந்தபோதும்
சமாதானம் சொல்லியே தரைதட்டினான்
என்ன நடந்தது இறுதியில்?
அமைதிப்படை ஆடவந்தபோதும்
அழகிய அந்தச் சொல்லையே உச்சரித்தது
பின்னர்தான் புரிந்தது நமக்கு.
மீண்டும் மீண்டும் சமாதானப் பாடலுடன்தான்
விடுதலைத் திசைகளை எரியூட்டுகின்றனர்.
விரியும் சிறகுகளை வெட்டிவீழ்த்துகின்றனர்.
பாவப்பட்ட சமாதானமென்ற சொல்மீதே
கோபம் வருகிறது நமக்கிப்போ.
வாழ்வுக்காய் நாம்தரித்த ஆடைகலைத்து,
வழியெங்கும் வளர்த்த பூமரங்கள் எரித்து,
மனிதரென எமக்கிருந்த உரிமை மறுத்து
துடைத்தழித்த பாவம் சூழ்ந்தது இன்று.
எத்தனை சாதுவாக,
எத்தனை பிள்ளைப்பூச்சியாக
திருப்பியடிக்க வலுவற்ற தேகத்திற்தானே
மீண்டும் மீண்டும் அடித்தார்கள்.
ஈழத்தமிழர் இழிவுற்றவரெனக் கருதி
எத்தனை காலமாய் இடித்தார்கள்.
அந்த வலியிருந்து உற்பவித்த வல்லமைதானே
பிரபாகரன் என்ற பெருநெருப்பு.
அழுதவரின் கடைசிக் கண்ணீர்த் துளியிருந்தே
இத்தனை பேரெழுச்சியும் பிரசவமானது.
தருவதைத் தாருங்கள் வாங்கிக்கொள்கிறோமென
கைநீட்டியபோதில் கணக்கிலெடுக்காதவர்கள்
இப்போ கதவுதிறந்து காத்திருக்கிறார்களாம்
சமாதானத்துக்காக.
யாருக்குப் பூச்சுற்றப் பார்க்கின்றனர் காதில்?
அடிவிழும்போதே ஞானம் பிறக்குமெனில்
அடியே நியாயத்தின் திறவுகோல்.
கொடி சரியும்போதே
கோத்தபாய குழுமத்துக்குப் புரியுமெனில்
கரும்புலிகளுக்கும் தெரியும் இந்தச் சமன்பாடு.
உப்புச்சப்பற்ற விருந்துக்கழைக்கும் உலகமே!
முதலில் எம்மை உணர்ந்துகொள்.
ஏனைய முன்னுதாரணங்களைக் கையிலெடுத்து
எம்மீதும் பிரயோகிக்க எத்தனிக்குமெனில்
குறித்துக்கொள்ளுங்கள் குறிப்பேட்டில்
தமிழீழம் அழியுமெனினும் தலைகுனியமாட்டாது.
எங்கள் பிறப்பும்,
எங்கள் வளர்ப்பும் வித்தியாசமானது.
இது வியாசனெழுதும் வெறும் வரிகளல்ல
நாளைய காலத்துக்கு நாமெழுதும் தீர்ப்பு.
பலத்தின் பக்கமே உலகம் தீர்ப்பெழுதுகிறது
வல்லவன் நிமிரும்போது வளைக்கமுயலும்
வளைக்க முடியாதெனில் அணைத்துக்கொள்ளும்.
விடுதலைக்கான சாளரங்களைத் திறக்கும்போது
காற்று முதலிற் சண்டைக்கே வரும்
சண்டையிற் தோற்கும்போதில்
சரணாகதி அடைந்துவிடும்
அடக்குமுறையாளரின் அகராதியில்
இதற்கு இராஜதந்திரம் என்றிருக்கும்.
நாங்கள் முன்னேறுவோம்
தொடர்ந்தும் முன்னேறிக்கொண்டேயிருப்போம்
சத்தியம் சாவதில்லையே எப்போதும்.